வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

Email : news@eelanadu.lk மலர் : 03 23.07.2022 சனிக்கிழமை இதழ் : 229 பக்கங்கள் : 16









# இராணுவம் போர்க் குற்றங்கள் இழைத்தமையை ஏற்கவேண்டும்!

## தென்னிலங்கையில் ஒலிக்கும் குரல்கள்

கொழும்பு, ஜூலை 23

"தமிழ் மக்களுக்கு எதிராக இராணுவம் போர் குற்றங்களில் ஈடுபட்டது. இந்த உண்மையை சிங்கள மக்களான நாம் ஏற்க வேண்டும்" - "வெளித் தொடர்புகளே இல்லாத வன்னியில் என்ன நடை பெற்றிருக்கும் என்து தொடர்பில் சிங்கள மக்கள் இப்போது சிந்திக்கத் தொடங்கியுள்ளார்கள்."

- இவ்வாறான கருத்துக்களே தற்போது தென்னிலங்கை சமூக ஊடகங்களிலும், சிங்கள இணையத் தளங்களிலும் அதிகம் பேசுபொருளாக்கியுள்ளன.

நேற்று அதிகாலை காலி முகத்திடல் போராட்டக் களத்தில் முப்படையினரும்

15

ஜனாதிபதி ஆணைக்குழுக்களுக்கு

# ரூ. 1009 கோடி செலவு; ஆனால், பலன் என்ன?

கொழும்பு, ஜூலை 23

நாட்டில் குற்றங்கள், மோசடிகள், முறைகேடுகள், ஊழல்கள் மற்றும் சமூகப் பிரச்னைகளை விசாரிக்க 201 - 2016 காலப்பகுதியில் 5 ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டன. இவற்றுக்காக ஆயிரத்து 9 கோடியே 51 இலட்சம் ரூபாய்க்கும் அதிக பணம் செலவிடப்பட்டது என்று

15

# காலிமுகத்திடல் தாக்குதல் ஐ.நா. சபை கடும் கண்டனம்

கொழும்பு, ஜூலை. 23

கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது ஆயுதப்படையினர் நடத்திய தாக்குதல் குறித்து இலங்கைக்கான ஐ.நா. வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹனா சிங்கர் கடுமையான கண்டனம் தெரிவித்துள்ளார்.

"போராட்டக்காரர்களைக் கலைக்க வன்முறையை பயன்படுத்தியமை தொடர்பில் ஐ.நா. கடுமையான கரிசனை கொண்டுள்ளது" என்று தனது ருவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்கள் மற்றும் மனித உரிமைப்

15

# போர் களமானது காலிமுகத்திடல்! போராட்டக்காரர்கள் விரட்டியடிப்பு!!

- 50இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்
- 9 பேர் கைதாகி பிணையில் விடுவிப்பு
- ஊடகவியலாளர்கள்மீதும் தாக்குதல்கள்



**கொழும்பு, ஜூலை 23**

**காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் நேற்றிரவோடு இரவாக படையினரால் கடுமையாக தாக்கப்பட்டு விரட்டியடிக் கப்பட்டனர். இந்தத் தாக்குதல்களில் 50இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந் தனர். ஊடகவியலாளர்கள் மீதும் கடும் தாக்குதல்கள் மேற்கொள் ளப்பட்டன.**

15

# அம்புலன்ஸ் உதவி சேவையை பெற தூதரகங்களை நாடிய போராளிகள்!

கொழும்பு, ஜூலை 23

காலிமுகத்திடலில் போராட்டக் காரர்கள் மீது படையினர் நேற்று கடும் தாக்குதல்களை நடத்தியிருந்தனர். காயமடைந்தவர்களை ஏற்றிச் செல்ல விடாது அம்புலன்ஸ் வாகனங்களையும் அவர்கள் தடுத்து நிறுத்தியிருந்தனர். இதையடுத்து விரைவு அம்புலன்ஸ் உதவிகளைப் பெற போராட்டக்காரர்கள் சர்வதேச தூதரகங்களை நாடினர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

காலிமுகத்திடலில் ஜனாதிபதி செயலகம் முன்பாக நடந்த போராட்டம் நேற்று அதிகாலை

15

# ஊழல் குற்றச்சாட்டு தொடர்பில் ரணில்மீது விசாரணை அவசியம்!

## சர்வதேச பொருளியல் நிபுணர் வலியுறுத்து

நியூயோர்க், ஜூலை 23

ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் விசாரணை நடத்தப்பட வேண்டும் என உலகப் புகழ்பெற்ற பொருளாதார நிபுணரும் ஜோன் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் பேராசிரியருமான ஸ்டீவ் ஹாங்க் தெரிவித்துள்ளார்.

இந்தத் தகவலை அவர் தனது ருவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

"1977ஆம் ஆண்டு முதல்

15

# எரிபொருளுக்கு யாழ்ப்பாணத்தில் புதிய நடைமுறை

யாழ்ப்பாணம், ஜூலை 23

யாழ். மாவட்டத்தில் எரிபொருள் விநியோகம் தொடர்பாக நேற்று மாவட்ட செயலர் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

எரிபொருள் விநியோகத்திற்கான வழங்கப்

15

# தினேஷ் குணவர்த்தன பிரதமராக பதவியேற்பு!

கொழும்பு, ஜூலை 23

நாட்டின் புதிய பிரதமராக தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்த்தன (வயது 73) நேற்று வெள்ளிக்கிழமை பதவியேற்றார். இவர் நாட்டின் 27ஆவது பிரதமராவார்.

இவர், ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியை கொழும்பு றோயல் கல்லூரியில் கற்றார். இன்றைய ஜனாதிபதி

15



# புதிய அமைச்சரவையும் நேற்று பொறுப்பேற்றது!

## டக்ளஸூக்கு மீண்டும் கடற்றொழில்

கொழும்பு, ஜூலை 23

நாட்டின் புதிய பிரதமராக தினேஷ் குணவர்த்தனவும் அவருடன் புதிய அமைச்சரவையும் நேற்றுப் பதவியேற்றனர்.

நேற்று காலை பிரதமரும் புதிய அமைச்சரவையும் பதவியேற்றனர். இதையொட்டி பதவியேற்பு நிகழ்வு இடம்பெற்ற பிரதமர் அலுவலகத்துக்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

முதன்முறையாகத் திரைப்படம் பார்ப்பதற்காக ரிக்கெற் வாங்கினான் ஒருவன். சிறிது நேரம் கழித்து மீண்டும் ஒரு ரிக்கெற் வாங்கினான். இப்படியே மூன்றாம் முறையும் வந்து ஒரு ரிக்கெற் வாங்கினான்.

ரிக்கெற் கொடுப்பவரால் வியப்பை அடக்க முடியவில்லை. அவனைப் பார்த்து "எதற்காக மீண்டும் மீண்டும் வந்து ரிக்கெற் வாங்குகிறீர்கள்?" என்று கேட்டார்.

"நான் ஒவ்வொரு முறையும் படம் பார்க்க உள்ளே நுழையும் போதும் வெளியில் நிற்பவர் என் கையிலுள்ள ரிக்கெற்றைப் பிடுங்கி அதைக் கிழித்துப் பாதியை என்னிடம் தருகிறார். அதனால் மீண்டும் மீண்டும் ரிக்கெற் வாங்குகிறேன்." என்று பதில் சொன்னான் அவன்.

ஜனாதிபதி தேர்தல் நடக்கவிருப்பது உறுதியாகியதும், வழக்கம்போல நமது தமிழ்த் தேசியக் கட்சிகள் ஆறும், ஆறு நாட்களாக தொடர்ந்து கூட்டம் போட்டன.

கூட்டத்தின் முடிவில் வழக்கம்போல தேர்தலுக்கு இரண்டு தினங்கள் இருக்கும்போது நமது கோரிக்கைகள் அடங்கிய நீண்ட அறிக்கை வெளியிடப்பட்டது.

இந்த விடயம் "ஈழநாடு"வில் வெளிவந்த அன்று, எமது அலுவலக பையன் ஒருவன் இந்த ஊர்க்குருவியிடம் கேட்டான், "ஏன் சேர் நம்மட கட்சிகள் எப்பயும் தமிழ் தரப்பிலை முன்வைக்கவேண்டிய கோரிக்கைகளை ஒவ்வொரு தடவையும் புதுசு புதுசா தயாரிக்கிறவை. எங்கட பிரச்னைகள் எப்பயும் ஒரே மாதிரித்தானே இருக்குது...?"

அந்தப் பையனின் கேள்விக்கு என்னிடம் விடை இருக்கவில்லை.

ஆனால் அந்தப் பையனின் கேள்வி பல ஆயிரம் கேள்விகளை என்னுள் ஏற்படுத்தியது.

அந்த ஆறு கட்சிகளில் தமிழ் அரசுக் கட்சி, ரெலோ, புளொட் என்பவை, தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகள். இவர்களும் சேர்ந்து தயாரித்த அந்த ஆவணம், ஜனாதிபதி வேட்பாளர்களிடம் அந்தக் கோரிக்கையைக் கொடுத்து, அதனை ஏற்றுக்கொள்கின்றவர்களை ஆதரிப்பது என்று முடிவெடுப்பதற்காக தயாரிக்கப்பட்டது என்று சொல்லப்பட்டது.

ஆனால், எந்த வேட்பாளருமே அதனை கண்டுகொள்ளவே இல்லை. எதற்காக அவர்கள் கண்டுகொள்ளவில்லை என்பது ஒன்றும் இரகசியமானதல்ல.

வேட்பாளர்களுக்கு தேவை, பாராளுமன்றத்தில் இருக்கின்ற தமிழ்த் தேசியவாதிகள் என்று சொல்லப்படுகின்ற பதின்மூன்று பேரின் வாக்குகள் மாத்திரமே. அதில் இரண்டு வாக்குகள் "தில்லாக" முடிவெடுத்து விட்டன. யாரையும் ஆதரிப்பதில்லை என்று. இப்போது மிகுதி இருப்பது பதினொரு வாக்குகள்தான். அந்த பதினொன்றில் பத்து வாக்குகள் கூட்டமைப்புக்கு சொந்தமானவை. அவற்றை- அந்த ஆதரவைப் பெறவேண்டும் என்றால் அதற்காக என்ன செய்யவேண்டும் என்பது தெரியாத அளவுக்கு எந்த வேட்பாளரும் இல்லை.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில், ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கை வாக்கெடுப்புக்கு ஆதரவு தேடுவதற்கான "டீல்" கள் நடந்துகொண்டிருந்த காலம் அது. நல்லாட்சி அரசில் இருந்த ஒரு முஸ்லிம் தலைவர் அப்போது சொன்ன கதை ஒன்று ஞாபகத்திற்கு வருகின்றது.

தன்னை அழைத்த ரணில், மிகவும் கோபமாக, உங்கள் கட்சிக்காரரின் ஆதரவைப் பெறுவதென்றால், உங்களிடமுள்ள ஐந்து எம்.பிக்களோடும் தனித்தனியாக கதைக்க வேண்டியிருக்கின்றது (டீல் போடவேண்டி) ஆனால் பாருங்கள், பதினைந்து பேரைக் கொண்ட கூட்டமைப்பின் ஆதரவைப் பெறுவதற்காக ஒருவருடன் பேசினால் போதுமானது என்றாராம்.

இதனை ரணில் மாத்திரமல்ல, அப்போது அவருடன் இருந்த சஜித்தும் அறிந்துதான் வைத்திருந்தாரோ தெரியவில்லை. அதனால்தான் அவர் அந்த ஒருவருடன் மட்டும் பேசிக்கொண்டிருந்தார்.

கடைசியில் கூட்டமைப்பின் பத்து எம்.பிக்களும் ரணிலுக்கு எதிராக வாக்களிக்க வேண்டும் என்று முடிவெடுக்க, அந்த ஒரு தொலைபேசி அழைப்புத்தான் காரணம் என்றாலும், அவர்கள் அத்தோடு நின்றுவிடவில்லை. சில கோரிக்கைகளுக்கான உறுதிமொழியையும் எழுத்தில் வாங்கிக் கொண்டுதான் ஆதரவு நிலைப்பாட்டை எடுத்தனர்.

அதற்காக அப்படியொரு நிலைப்பாட்டை எடுத்தபின்னரும் எல்லோரும் அதேபோல டலஸுக்கு ஆதரவாகத்தான் வாக்களித்தவர்கள் என்பதல்ல. ஆனால், அவர்கள் அனைவரையும் பொறுத்தவரை ஆதரவாகத்தான் வாக்களித்தார்கள்.

இங்கே நம்மை உறுத்துவது என்னவென்றால், ஆறு கட்சிகள் ஆறு நாட்களுக்கும் மேலாக தொடர்ந்து பேசி, தயாரித்த கோரிக்கைகள் மீதல்லவா அவரிடம் உறுதிமொழியைப் பெற்றிருக்கவேண்டும்? ஆனால், அப்படி நடக்கவில்லை. அந்த கோரிக்கைகளையும் கட்சியில் உள்ள அந்த "ஒருவரே" தயாரித்து கையெழுத்தையும் பெற்றிருக்கிறார்.

அப்படியெனில் எதற்காக அந்த ஆறு நாள் கொண்டாட்டம் எல்லாம் நடந்தது? தமிழ் மக்களின் தலைகளில் மிளகாய் அரைக்கவா?

**- ஊர்க்குருவி**

**- ஊர்க்குருவி.**

# நெல்லியடியில் பெற்றோல் விநியோகம்! நூற்றுக்கணக்கானோருக்கு ஏமாற்றம்!!

வடமராட்சி, ஜூலை 23

வடமராட்சி - நெல்லியடியில் நீண்ட நாட்களுக்கு பின்னர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இறுதி இலக்கங்களின் அடிப்படையில் பெற்றோல் விநியோகம் இடம்பெற்றது. எனினும், இரவு 10 மணியுடன் பெற்றோல் முடிவடைந்ததால் நூற்றுக்கணக்கானவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

நேற்று முன்தினம் இறுதி இலக்கங்களான 3,4,5 ஆகிய வற்றுக்கு பெற்றோல் வழங்கப்பட்டது. பல்வேறு பகுதிகளிலிருந்தும் மக்கள் அங்கு சென்று பெற்றோலை பெற்று சென்றனர்.

இதனால், சுமார் இரண்டு கிலோமீற்றர் நீளம் வரை மோட்டார் சைக்கிள்கள் வரிசையும், சுமார் ஒரு கிலோமீற்றர் நீளமான முச்சக்கர வண்டி வரிசையும் உருவானது. சுமார் இருநூறு வரையான கார்களும் வரிசையில் நின்றன.

கரவெட்டி பிரதேச செயலரின் பொறுப்பில் நெல்லியடி பொலிஸார் மற்றும் இராணுவத்தின் ஒழுங்குபடுத்தலில் குறித்த பெற்றோல் விநியோகம் இடம்பெற்றது.



பெற்றோல் விநியோகத்தின் போது பிரதேச செயலகங்களால் வழங்கப்பட்ட அட்டையில் பதியப்பட்டே பெற்றோல் வழங்கப்பட்டது. மோட்டார் சைக்கிள்களுக்கு 1,500 ரூபாய்க்கும், ஒட்டோக்களுக்கு 2,000 ரூபாய்க்கும் கார்களுக்கு 7,000 ரூபாய்க்கும் பெற்றோல் வழங்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் பெற்றோல் முடிவடைந்ததால் வழங்கல் நிறுத்தப்பட்டது. இதனால், நூற்றுக்கணக்கான மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர். முன்னைய நாட்களை விட அமைதியாக விநியோகம் இடம்பெற்றது.

இதேவேளை டீசல் விநியோகம் நேற்று பிற்பகல் இரண்டு மணிக்கு பின்னர் இடம் பெற்றது. கரவெட்டி பிரதேச செயலரின் அனுமதி பத்திரத்தின் அடிப்படையில் விநியோகம் இடம்பெற்றது. இதற்காகவும் மிக நீண்ட வரிசை காணப்பட்டது.

இதேவேளை எரிபொருள் தாங்கி வந்தபோது பலத்த இராணுவ, பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. (ஐ-02)

# முகமாலையில் வெடிபொருள் வெடித்து கண்வெடியகற்றும் பணியாளர் காயம்!

கிளிநொச்சி, ஜூலை 23

முகமாலையில் கண்ணிவெடி வெடித்ததில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த பணியாளர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது, முகாமலை பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டு வரும் ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்தை சேர்ந்த நபர் நேற்று உணவு அருந்திவிட்டு கை கழுவும்போது நிலத்தில் பொருள் ஒன்று இருப்பதைக் கண்டுள்ளார்.

அதனை எடுத்து நிலத்தில் குத்திப் பார்த்தபோது வெடித்துச் சிதறியுள்ளது. இதன்போது குறித்த நபரின் கை சிதறிப் படுகாயமடைந்தார். கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப் பட்ட அவர், மேலதிக சிகிச் சைக்காக யாழ். போதனா வைத் தியசாலைக்கு மாற்றப்பட்டார். (ஐ)

# மறுமலர்ச்சி மன்றத்தின் பொன்விழா கொண்டாட்டம்!

யாழ்ப்பாணம், ஜூலை 23

பண்டத்தரிப்பு - காலையடி மறுமலர்ச்சி மன்றத்தின் (1972 - 2022) பொன்விழா ஆண்டு கொண்டாட்டம் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் இடம்பெறவுள்ளன.

பொன்விழா கொண்டாட்டத்தின் ஒரு பாகமாக இன்று சனிக்கிழமை காலை 6 மணிக்கு மரதன் ஓட்டப்போட்டி இடம்பெறவுள்ளது. இதன் பின்னர் 4 மணியளவில் ஆரம்பமாகும் மேடை நிகழ்ச்சிகளில், சண் நாடக குழுவின் தயாரிப்பில் உருவான, கு. கணேசராசாவின் எழுத்துரு, நெறியாள்கையில் "தலையெழுத்து" நாடகமும், நாடக அரங்கக் கல்லூரியின் தயாரிப்பில் பேராசிரியர் கா. ரதிதரனின் நெறியாள்கையில் அன்ரன் செக்கோவின் எழுத்துருவில் குழந்தை ம. சண்முகலிங்கத்தின் மொழிபெயர்ப்பில் கிரு பாகரன், தவசோதிநாதன் ஆகி யோரின் நடிப்பில் பல மேடை கள் கண்ட, "தான் விரும்பாத் தியாகி" நாடகமும் இடம் பெறவுள்ளன.

நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் இடம்பெறவுள்ள இரண்டாம் நாள் நிகழ்வுகளில் மறுமலர்ச்சி மன்றத்தின் தயாரிப்பாக புனிதா துஷ்யந்தனின் எழுத்தாக்கத்தில் கனிஸ்ரன் நெறியாள்கையில் "புத்தகப் பை" என்ற சிறுவர் நாடகம் உள்ளிட்ட பல்வேறு கலை நிகழ்வுகளும் கௌரவிப்பு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

இந்த இரு நாள் நிகழ்வுகளிலும் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு மறுமலர்ச்சி மன்றத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (ஐ)

# கௌரவிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 23

அரச ஊழியருக்கான நாடகப் போட்டியில் தொடர்ந்து மூன்று முறை நடைபெற்ற குறு நாடகப் போட்டியில் அரசின் விருதுபெற்ற நாடகக் கலைஞர் விருதுபெற்ற கிருபாகரனைக் கௌரவிக்கும் விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இணுவில் அறிவாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பேராதனை பல்கலைக்கழக தமிழ்த்துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் வ. மகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி க. ரதிதரன், கௌரவ விருந்தினராக தெல்லிப்பழை ஸ்ரீதுர்காதேவி ஆலய தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் வாழ்த்துரைகளை பேராசிரியர் க. தேவராஜா, கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன், இணுவில் கந்தசுவாமி கோயில் அறங்காவல் தலைவர் இ. பாலசந்திரன், வட மாகாண பிரதம பொறியியலாளர் வே. பிறேம்குமார் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

நிகழ்வின் இறுதியில், சண் நாடகக் குழுவினரின் "தலை எழுத்து" ஆற்றுகையும் இடம் பெறும். (ஐ)

ஈழநாடு
Eelanadu
23.07.2022 சனிக்கிழமை
பிலவ வருடம், ஆடி 07

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# கூட்டமைப்பின் தீர்மானம் சரியானதா?

காலிமுகத்திடலில் தரித்திருந்த எதிர்ப்புக் குழுவினரை, இராணுவமும் பொலிஸாரும் இணைந்து, அகற்றியிருக்கின்றனர். இது ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்ட ஒன்று. ரணில் பதில் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றபோதே, பொதுச் சொத்துக்கள் மற்றும் பொது இடங்களில் தரித்திருப்பவர்கள் வெளியேற வேண்டுமென்றும், இல்லாவிட்டால் அவர்களை அகற்றுவதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்திருந்தார். அப்போதே ஒரு விடயம் தெளிவாகத் தெரிந்தது. அதாவது, ரணில் விக்கிரமசிங்க சில கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு தயங்கமாட்டார்.

இந்தப் பின்னணியிலேயே காலிமுகத்திடலில் தங்கியிருந்தவர்கள் அங்கிருந்து வலுக்கட்டாயமாக அகற்றப்பட்டிருக்கின்றனர். கூட்டமைப்பு இவ்வாறான விடயங்களை கருத்தில் கொண்டுதான், ஏகமனதான தீர்மானமொன்றை எடுத்ததாகவும், அது சரியென்பது தற்போது நிரூபிக்கப்பட்டிருப்பதாகவும் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்திருக்கின்றார். அதாவது, இவ்வாறான விடயங்களை கருத்தில் கொண்டுதான், தாங்கள் டலஸ் அழகப்பெருமவை ஆதரித்ததாகவும், அந்த முடிவு சரியானதென்பதுமே, சுமந்திரனின் வாதமாகும்.

சுமந்திரனின் வாதம் சரியான வாதம்தானா? தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் பிரதான கட்சி. வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் மக்கள் தங்களின் பிரச்னைகளை பிரதிபலிப்பார்கள் என்னும் நம்பிக்கையின் அடிப்படையில்தான் கூட்டமைப்பிலுள்ளவர்களுக்கு வாக்களித்திருக்கின்றனர். எனவே, கூட்டமைப்பின் எந்தவொரு தீர்மானமும் தமிழ் மக்களின் நலினிருந்து எடுக்கப்பட வேண்டுமேயன்றி, தென்பகுதியில் இடம்பெறும் விடயங்களின் அடிப்படையில் கூட்டமைப்பு தீர்மானங்களை எடுக்க முடியாது - எடுக்கவும் கூடாது.

ஜனாதிபதி வேட்பாளர் தெரிவின்போது, குறிப்பிட்ட வேட்பாளர்களில், எவரை ஆதரிப்பது அல்லது எதிர்ப்பது என்னும் முடிவு தமிழ் மக்களின் நலனிலிருந்து எடுக்கப்பட்டிருக்க வேண்டும். கூட்டமைப்பு டலஸ் அழகப்பெருமவை ஆதரிக்கும் முடிவை அறிவித்திருந்தது. ஆனால், டலஸ், தங்களின் வேட்பாளரென்று மகிந்த ராஜபக்ஷ பகிரங்கமாகக் கூறிவிட்டுச் செல்கின்றார். ஏனெனில், ஒப்பீட்டு அடிப்படையில் மொட்டுக் கட்சியின் உண்மையான வேட்பாளர் அவர்தான். டலஸ் பொதுஜன பெரமுனவின் பொருளாளர். ஜீ. எல். பீரிஸ், கட்சியின் தலைவர்.

ரணில் எதிர்ப்பின் அடிப்படையில் மட்டும்தான் விடயங்களை கூட்டமைப்பினர் ஆராய்ந்தனரே தவிர, தமிழ் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு அவர்கள் சிந்திக்கவில்லை. ஆட்சியிலிருப்பவர்கள் எவராகவும் இருக்கலாம் அது பிரச்னைக்குரிய விடயமல்ல. ஏனெனில், இலங்கையின் ஆட்சியாளர்களை தீர்மானிப்பது தமிழர்கள் அல்லர். ஆனால், எவர் ஆட்சியிருந்தாலும், அவர்களுடன் தமிழ் மக்களை நலன்களை முன்னிறுத்தி ஒரு தரப்பாக பேசுவதுதான் கூட்டமைப்பின் கடமை. அதற்காகத்தான் கூட்டமைப்பை தமிழ் மக்கள் தெரிவு செய்திருக்கின்றனர். ஆனால், இங்கு நடப்பதோ வேறு. தங்களின் தனிப்பட்ட விருப்புவெறுப்புகளின் அடிப்படையில் தீர்மானங்களை எடுத்துவிட்டு, பின்னர், நடக்கும் சம்பவங்களின் அடிப்படையில் விளக்கமளிக்க முற்படுவது ஓர் அரசியல் கையறுநிலையாகும்.

இந்திய -அமெரிக்க மற்றும் மேற்குலக நாடுகளைப் பொறுத்தவரையில் அவர்கள் - எவர் ஆட்சியிலிருந்தாலும் அவர்களுடன் பணியாற்றுவார்கள். அவர்களுக்கு சில விருப்பங்கள் இருந்தாலும்கூட, அந்த விருப்பங்கள் நிறைவேறவில்லை என்பதற்காகக் குறித்த ஆட்சியாளர்களுடன் கோபித்துக் கொள்ளப்போவதில்லை. உதாரணமாக இந்தியாவும் அமெரிக்காவும் மோசமான பயங்கரவாதிகள் எனப்படும் தலிபான்களின் கட்டுப்பாட்டிலிருக்கும், ஆப்கானிஸ்தானிய அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றுகின்றனர். ஏனெனில், ஆட்சி தலிபான்களிடம்தான் இருக்கின்றது. எனவே ஜனநாயகம் என்னும் ஒரு சொல் கொண்டு விடயங்கள் அனைத்தும் நோக்கப்படுவதில்லை.

கூட்டமைப்பின் ரணில் எதிர்ப்பு தீர்மானமானது, தவறானதொரு முடிவென்று, தமிழ் அரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா கூறுகின்றார். அவ்வாறாயின் அந்த முடிவு எடுக்கும்போது, ஆகக்குறைந்த உள் ஜனநாயகம் கூட பேணிப்பட்டிருக்கவில்லை என்பதுதானே பொருள். மாவையுடன் கலந்துரையாடி முடிவுகளை எடுத்திருந்தால், அவர் இவ்வாறானதோர் அறிக்கையை எவ்வாறு வெளியிட முடியும்? எனவே, மற்றவர்களுக்கு ஜனநாயக வகுப்பெடுப்பதற்கு முன்னர், கூட்டமைப்பின் முக்கியஸ்தர்கள் தங்களுக்குள் ஜனநாயகப் பண்பை வெளிப்படுத்த வேண்டியது கட்டாயமானது. தங்களுக்கு வாக்களித்த மக்களுக்கு பொறுப்பு சொல்ல வேண்டியது கட்டாயமானது.

# அதிகாலை அதிரடி!

அலசுவது இராஜதந்திரி

இலங்கையில் மிக நீண்ட காலமாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் என்று கூறுமளவுக்கு கடந்த மூன்று மாதங்கள் வரை காலிமுகத்திடலில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் தற்போது முடிவுக்கு வந்துள்ளது.

காலிமுகத்திடலில் கூடாரங்களையும் அமைத்து கடந்த மூன்று மாதங்களாக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுவந்த ‘கோட்டா கோ கம’ ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் ஆயுதப்படையினரால் நேற்று அதிகாலை விரட்டியடிக்கப்பட்டிருந்தனர்.

ஜனாதிபதியாக பதவியேற்றுக்கொண்ட பின்னர் ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்ட முதலாவது பணியாக ஆர்ப்பாட்டக்காரர்களை விரட்டியடித்த சம்பவம் விளங்குகின்றது. தமது பூர்வீக இல்லமும் அதிலிருந்த 2500 நூல்களைக்கொண்ட நூலகமும் தீக்கிரையான நிலையில் மனத்தாங்கலோடு இருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு என்ற நிலையில் தமக்குரிய சந்தர்ப்பம் வாய்த்தபோது நன்கு திட்டமிட்ட முறையில் ஆர்ப்பாட்டக்காரர்களை விரட்டியடித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கோட்டா கோ கம ஆர்ப்பாட்டக்காரர்களை விரட்டியடிக்க முற்பட்டமைக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களை விரட்டியடித்து பின்வாங்கச் செய்தமைக்குமிடையே நிறையவே வேற்றுமைகள் இருக்கின்றன.

முதலாவதாக ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு மறைமுகமாக விடுக்கப்பட்ட எச்சரிக்கை. அந்த எச்சரிக்கையில் காலிமுகத்திடலில் அமைந்துள்ள காலஞ்சென்ற பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கவின் சிலையை சூழவரவுள்ள ஐம்பது மீற்றர் பிரதேசத்தை ஆள்நடமாட்டமில்லாத பகுதியாக ஜனாதிபதி அறிவித்திருந்தார். இதனையடுத்து அவசரகால சட்டத்தை பிரகடனப் படுத்தி ஆயுதப்படையினரை காலிமுகத்திடல் சுற்றுவட்டப்பகுதியில் களமிறக்கியிருந்தார்.

இரண்டாவதாக முழுநாடுமே உறக்கத்திலிருந்தவேளை நேற்றைய தினம் அதிகாலை மூன்று மணியளவில் கோட்டா கோ கம விரட்டியடிப்பு நடவடிக்கை அரங்கேறியிருந்தது.

மூன்றாவதாக நேற்றைய கோட்டா கோ கம விரட்டியடிப்பு நடவடிக்கையை மேற்கொண்டவர்கள் பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினருமே தவிர வெளியார் எவரும் ஈடுபடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நான்காவதாக காலிமுகத்திடல் அதிரடி நடவடிக்கை இடம்பெறப்போவது ஜனாதிபதிக்கும் படையதிகாரிகளுக்கும் மட்டுமே தெரிந்திருந்ததே தவிர, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கோ அல்லது வேறு அதிகாரிகளுக்கோ தெரிந்திருக்கவில்லை.

இத்தகைய பின்னணியில் முழுநாடுமே விழித்தெழும் முன்னர் காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டம் பத்து பேர் மட்டுமே காய மடைந்த நிலையில் வன்முறைகள் விரிவடையாத வகையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதேவேளை, கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது காலிமுகத்திடல் கோட்டா கோ கம ஆர்ப்பாட்டத்தை கலைக்க மேற்கொண்ட முயற்சி முற்றுமுழுதாக வன்முறை சார்ந்ததாகவே இருந்தது.

அத்துடன், காடைத்தனத்தை கட்டவிழ்த்து விட்டதாகவும் அமைந்திருந்தது. கடந்த ஏப்ரல் மாதம் ஆரம்பமான கோட்ட கோ கம சாத்வீக ஆர்ப்பாட்டத்தை முறியடிக்கும் விதத்தில் அலரி மாளிகையிலிருந்து கடந்த மே மாதம் ஆவேசத்தோடு அரச தரப்பு ஆதரவாளர்கள் காலிமுகத்திடல் நோக்கிச்சென்று வன்முறையில் ஈடுபட்டனர். அவர்கள் மதுபோதையிலிருந்தனர். காடையர்கள் சிறைக்கைதிகள் ஆகியோரும் அவர்களில் அடங்கியிருந்தனர்.

அத்துடன், பட்டப்பகல் வேளை அந்தத் தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டதால் காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டகாரர்கள் தாக்கப்படுகின்றனர் என்ற செய்தி காட்டுத் தீயாக பரவி வன்முறைகளையும் தூண்டி விட்டிருந்தது. இதன்காரணமாக எழுபதுக்கும் அதிகமான பாராளுமன்ற உறுப்பினர்களின் சொத்துக்கள் உடைமைகளுக்கும் நாடளாவிய ரீதியல் பெருஞ்சேதம் ஏற்பட்டிருந்தது.

ஆனால், நேற்று ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கை அதிகாலை வேளையாக இருந்ததோடு அதில் காடையர்களின்றி பாதுகாப்பு படையினரே முழுஅளவில் ஈடுபட்டிருந்தனர்.

இதுதவிர, நேரடியாகவே பாதுகாப்பு படையினர் களமிறங்கியிருந்த நேற்றைய அதிகாலைவேளை முழு நாடுமே ஆழந்த உறக்கத்தில் இருந்தது. இதன்காரணமாக ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு ஆதரவானவர்களோ அல்லது அனுதாபிகளோ நேரடியாகத் தலையிட முடியாத நிலை ஏற்பட்டிருந்தது.


அத்துடன், முன்னேற்பாடாக பாதுகாப்பு வலயம், அவசரகாலச்சட்டம் என்பவையெல்லாம் கொண்டுவரப்பட்டு ஒரு கலகமடக்கும் நிபுணத்துவ முறையில் ஆர்ப்பாட்டக்காரர்களை வெளியேற வைக்கும் நடவடிக்கை நன்கு ஒப்பேறியிருந்தது.

காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டம் கடந்த ஏப்ரல் மாதம் ஆரம்பமான நிலையில் தற்போது முழுவதுமாக முறியடிக்கப்பட்டுள்ளது. ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆர்ப்பாட்டத்தை கைவிடப்போவதாக அறிவித்ததன் பின்னணியில் தாம் விரட்டியடிக்கப்பட்டதாகக் கூறிவருகின்றனர்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மட்டுமல்ல. புதிய ஜனாதிபதியும் தம்மால் இலக்கு வைக்கப்பட்டவர்கள் என்றே ஆர்ப்பாட்டக்காரர்கள் கூறியிருந்தனர்.

ஆனால், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீது ஆர்ப்பாட்டக்காரர்கள் வைத்த இலக்கு குறிதவறவில்லை. புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கமீது வைக்கப்பட்ட இலக்கு குறிதவறியதோடு மட்டுமல்லாது மீளவும் திரும்பி வந்து ஆர்பாட்டக்காரர்களை விரட்டியடித்துள்ளமையே அவதானிக்க முடிகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலன் தராமல் போகும். சிந்தித்து செயல்படுங்கள். எதிர்பார்ப்பு தாமதமாகும். பணியில் மட்டும் முழுமையாக கவனம் செலுத்தவும்.

**இடபம்**
வேலை பளு அதிகரிக்கும். திடீர் செலவால் சங்கடம் ஏற்படும். கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. வழிபாடு நன்மையளிக்கும். அலைச்சல் அதிகரிக்கும். முயற்சியில் இழுபறி நிலை ஏற்படும்.

**மிதுனம்**
பழைய கடன்களை அடைத்து நிம்மதி காண்பீர்கள். வரவு அதிகரிக்கும். புதிய முயற்சி வெற்றியாகும். நீண்டநாள் எண்ணம் நிறைவேறும். வாகனம் வாங்குவீர்கள். பணியிடத்தில் செல்வாக்கு உயரும்.

**கடகம்**
தொழிலை விரிவு செய்யும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். எண்ணம் நிறைவேறும். வியாபாரத்தில் உங்கள் அணுகுமுறையால் புதிய வாடிக்கையாளர்கள் வருவர். வழிபாட்டில் மனம் செல்லும்.

**சிம்மம்**
குடும்ப நலனில் அக்கறை செலுத்துவீர்கள். நண்பர்களால் அனுகூலம் அடைவீர்கள். புதிய முயற்சிகள் நிறை வேறும். பணியில் எதிர்பார்த்த மாற்றம் காண்பீர்கள். அதிகாரிகளின் ஆதரவு உண்டாகும்.

**கன்னி**
நிதானமாக செயல்பட வேண்டிய நாள். புதிய முயற்சிகள் வேண்டாம். எதிர்பார்ப்புகளில் தடை ஏற்படும். மனதில் இனம்புரியாத சங்கடம் தோன்றும். செயல்களில் இடையூறுகளை சந்திப்பீர்கள்.

**துலாம்**
உங்கள் எண்ணம் எளிதாக நிறைவேறும். ஆதாயம் அதிகரிக்கும். உங்கள் திறமைகள் வெளிப்படும் நாள். நினைத்ததை அடைவீர்கள். விலகிச் சென்றவர்கள் தேடி வருவார்கள். மகிழ்ச்சி யான நாள்.

**விருட்சிகம்**
நீண்டநாள் முயற்சி நிறைவேறும். போட்டியாளர்கள் விலகுவார்கள். அலுவலகத்தில் பொறுப்புகள் கூடும். உங்கள் செல்வாக்கு உயரும். நினைத்ததை நிறைவேற்றுவீர்கள்.

**தனுசு**
உறவினர்கள் வழியில் நெருக்கடி விலகும். உங்கள் வார்த்தைக்கு மதிப்புண்டாகும். எ சேமிப்பில் கவனம் செல்லும். சொத்து வாங்கும் முயற்சி நிறைவேறும். குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**மகரம்**
தொழிலில் கவனம் செலுத்துவீர்கள். வருமானம் அதிகரிக்கும். உழைப்பிற்கேற்ற வருவாய் உண்டாகும். எதிர்ப்பை சமாளித்து வெல்வீர்கள். உங்கள் முயற்சி இழுபறிக்குப் பின் நிறைவேறும்.

**கும்பம்**
வியாபாரத்தில் இருந்த தடை விலகும். உங்கள் முயற்சியால் ஆதாயம் சேரும். துணிச்சலுடன் செயல்பட்டு நினைத்ததை நிறைவேற்றிக் கொள்வீர்கள். குடும்ப நலனுக்காக பாடுபடுவீர்கள்.

**மீனம்**
குடும்பத்தில் செல்வாக்கு உயரும். பண வரவில் இருந்த தடை அகலும். வேலையிடத்தில் பொறுப்பு கூடும். உங்கள் திறமைக்கு மதிப்புண்டாகும். கோயில் தரிசனம் மகிழ்ச்சி தரும்.

# முதுமக்கள் வாழ்ந்த இடம் கொங்கராயக்குறிச்சியா?

## ஆதிச்சநல்லூர் ஆய்வை விரிவாக்க கோரிக்கை

மதுரை, ஜூலை 23

ஆதிச்சநல்லூரில் கண்டெடுக்கப்படும் தொல் பொருட்கள் மூலம் அறியப்படும் முதுமக்கள் வாழ்ந்த இடம் கொங்கராயக்குறிச்சியா? என்ற சந்தேகம் எழுந்துள்ளதால், அதனை முறையாக ஆய்வு செய்ய வேண்டும் என தொல்லியல் ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தாமிரபரணிக்கரையில் கொங்கராயக்குறிச்சி அமைந்துள்ளது. இந்த ஊரில் முற்கால பாண்டியன் மாறன்சடையனால் 9ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட வலம்புரி விநாயகர் கோயில் உள்ளது. மண்ணில் புதைந்த நிலையில் சில ஆண்டுகளுக்கு முன்பு வீரபாண்டீஸ்வரர் கோயில் வெளிப்பட்டது. இந்த கோயில் 11ஆம் நூற்றாண்டில் ஜடாவர்மன் வல்லப பாண்டியனால் கட்டப்பட்டது.

இந்த கோயில்கள் இரண்டும் மண்ணுக்குள் புதைந்தே காணப்படுகின்றன. அதிலும் பழைய வெயிலுகந்தம்மன் மற்றும் மாலை அம்மன் கோயில்கள் முழுவதும் மண்ணுக்குள் புதைந்து கோயிலின் விமானங்கள் மட்டுமே வெளியே தெரியும்படி உள் ளன. ஆற்று வெள்ளத்தில் அழிந்துபோன இந்த ஊரில் தான் 19ஆம் நூற்றாண்டில் கிறிஸ்தவ பிரசங்கியார் ரேணி யஸ் அடிகளார் கிறிஸ்தவ ஆலயம் மற்றும் கிறிஸ்தவ குடியிருப்புகளை உருவாக்கியுள்ளார்.

வீரபாண்டீஸ்வரர் கோயிலை போன்று இந்த ஊரில் மேலும் பல கோயில்களும் மண்ணுக்குள் புதைந்துள்ளன. இவை குறித்த தகவல்களை வெளியே கொண்டு வர தமிழகம் மற்றும் மத்திய தொல்லியல் துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தொல்லியல் ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ஐ)

# விடுவிக்கப்பட்ட மீனவர்கள் நேற்று சென்னை வந்தனர்!

சென்னை, ஜூலை 23

இலங்கை சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்ட 23 தமிழக மீனவர்களை சென்னை விமான நிலையத்தில் மீன்வளத்துறை அதிகாரிகள் வரவேற்றனர்.

தமிழ்நாடு - மயிலாடுதுறை, நாகப்பட்டினம் மற்றும் காரைக் கால் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் கடந்த 3ஆம் திகதி அதிகாலையில் எல்லைதாண்டிய குற்றத்திற்காக கடற்படையால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களை விடுவிக்க தமிழக அரசு நடவடிக்கைகளை எடுத்தது. இதனால், அவர்கள் கடந்த 8ஆம் திகதி விடுவிக்கப்பட்டனர். இவ்வாறு விடுவிக்கப்பட்டவர்கள் நேற்று காலை கொழும்பிலிருந்து விமானம் மூலம் சென்னை வந்து சேர்ந்தனர்.

# காங்கிரஸ் கட்சியினர் பெரும் போராட்டம்!

சென்னை, ஜூலை 23

சோனியாகாந்தியிடம் அமுலாக்கத்துறை விசாரணை நடத்த எதிர்ப்பு தெரிவித்து சென்னையில் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி சார்பில் போராட்டம் நடந்தது. இதில் ஈடுபட்ட கே.எஸ்.அழகிரி உள்பட 250 பேர் கைதாகி விடுதலை செய்யப்பட்டனர்.

நஷனல் ஹெரால்ட் வழக்கு தொடர்பான விசாரணைக்கு அமுலாக்கத்துறை அகில இந்திய காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்திக்கு அழைப்பாணை அனுப்பியது. இதனையடுத்து அவரிடம் நேற்றுமுன் தினம் விசாரணை நடந்தது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து சென்னையில் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி சார்பில் நேற்றுமுன்தினம் போராட்டம் நடந்தது. இந்த போராட்டத்துக்கு தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர் கே.எஸ். அழகிரி தலைமை தாங்கினார்.

இந்தப் போராட்டத்தில் ஏராளமான காங்கிரஸ் கட்சி அரசியல்வாதிகள், தொண்டர்கள் பங்குற்றனர். போராட்டத்தில் பிரதமர் மோடி, உள்துறை மந்திரி அமித்ஷாவின் படம் வைத்த உருவ பொம்மையை ஊர்வலமாக தூக்கி வந்து எரிக்க முயற்சித்தனர். ஆனால், பொலிஸார் அவர்களை தடுத்து நிறுத்தினர். பின்னர் அவர்கள் போராட்டம் நடைபெற்ற பகுதியில் இருந்து சற்று தூரத்தில் வைத்து அதை எரித்தனர்.

இதனையடுத்து போராட்டத்தில் ஈடுபட்ட கே.எஸ். அழகிரி உள்பட 250 பேர் கைது செய்யப்பட்டு, பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

(ஐ)

# பழனிசாமியை பதிலளிக்குமாறு உரிமையியல் நீதிமன்று உத்தரவு

சென்னை, ஜூலை 23

அ. தி. மு. க. இடைக்கால பொதுச் செயலாளராக செயல்பட பழனிசாமிக்கு தடை விதிக்கக்கோரி தொடரப்பட்ட வழக்கில் கே.பழனிசாமி, ஓ.பன்னீர் செல்வம் மற்றும் தமிழ் மகன் உசேன் ஆகியோர் பதிலளிக்க சென்னை உரிமையியல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த அதிமுக உறுப்பினரான எஸ். சூரியமூர்த்தி என்பவர் சென்னை 4ஆவது பெருநகர உதவி உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவில், "அ. தி. மு. கவில் கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் உறுப்பினராக பதவிவகித்து வருகிறேன்.

எனக்கு பொதுச்செயலாளர் கையொப்பமிட்டு உறுப்பினர் அட்டை வழங்கப்பட்டுள்ளது. ஜெயலலிதாவின் மறைவுக்குப் பிறகு ஓ. பன்னீர்செல்வமும், பழனிசாமியும் கட்சி விதிகளுக்கு எதிராக செயல்பட ஆரம்பித்தனர். குறிப்பாக அடிமட்டத் தொண்டர்களின் வாக்குரிமையை பறித்தனர்.

அந்த வாக்குரிமையை மீண்டும்பெறவே வழக்கு தொடர்ந்துள்ளேன். ஆனால், அரசியல் கட்சியின் உள் விவகாரங்களில் தலையீடு செய்ய நீதிமன்றத்துக்கு அதிகாரம் இல்லை என பழனிசாமி தரப்பில் வாதிடப்பட்டு வருகிறது.

காங்கிரஸ் கட்சியின் உள்விவகாரங்களில் தலையிட்டு உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. எனவே, கடந்த ஜூலை 11ஆம் திகதி ஒற்றை தலைமை தொடர்பாக பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை இரத்து செய்ய வேண்டும்.

இதேபோல, கடந்த ஜூலை 11ஆம் திகதி திநடைபெற்ற அ. தி. மு. க. பொதுக்குழுவில் இடைக்கால பொதுச் செயலாளராக பழனிசாமிதேர்வு செய்யப்பட்டு இருப்பதும் சட்ட விரோதமானது என்று அறிவிக்க வேண்டும் என்று கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிபதி, இதுதொடர்பாக அ. தி. மு. க. இடைக்கால பொதுச்செயலாளர் பழனிசாமி, அ. தி. மு.கவின் முன்னாள் பொருளாளர் ஓ.பன்னீர் செல்வம், அவைத் தலைவர் தமிழ் மகன் உசைன் ஆகியோர் பதிலளிக்க வேண்டும், என உத்தரவிட்டு விசாரணையை வரும் ஓகஸ்ட் 16ஆம் திகதிக்கு தள்ளி வைத்துள்ளார்.

(அ)

# ராஜபக்ஷ நிழல் அரசாங்கமே தற்போதும் செயற்படுகின்றது!

## சஜித் பிரேமதாஸ கருத்து

**கொழும்பு, ஜூலை 23**

**ராஜபக்ஷவின் கைப்பாவை அரசாங்கத்தின் வழமையான மிருகத்தனம் மற்றும் உத்தியோகபூர்வ வன்முறையைப் பயன்படுத்தி, தற்போதைய "ராஜபக்ஷ நிழல் அரசாங்கம்" காலிமுகத்திடல் அமைதியான போராட்டக்காரர்களுக்கு எதிராக கோழைத்தனமான மற்றும் வன்முறைத் தாக்குதலை நடத்தியுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

போராட்டக்காரர்கள் மீதான தாக்குதலை செய்தியிட வந்த பல உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் மற்றும் அங்கவீனமான போர் வீரர்களும் அந்த மனிதாபிமானமற்ற தாக்குதலுக்கு முகங்கொடுக்க நேரிட்டது. இந்த தாக்குதல் கொடூரமான உத்தியோகபூர்வ வன்முறையாகும்.

புதிய ஜனாதிபதி பதிவிக்கு வந்து ஒரு நாள் கழிவதற்குள் இந்த மனிதாபிமானமற்ற தாக்குதலைத் தொடுத்துள்ளதுடன் தனது எதிர்கால ஆட்சியின் தன்மை என்பதை இதன் மூலம் உணர்த்த முற்பட்டுள்ளார் என்றால், இவ்வாறான அட்டூழியங்களுக்கு அப்பாற்பட்ட பல மிக்க அரசாங்கங்கள் மக்கள் சக்தியால் வீட்டுக்கு அனுப்பப்பட்டதை அவருக்கு நினைவூட்ட விரும்புகின்றோம்.

அந்தந்த சிவில் போராட்டத்தின் போராளிகள் ஆக்கிரமித்திருந்த இடங்கள் அனைத்தையும் மீளக் கையளித்து கொண்டிருக்கும்போதும், அதற்குள், பாதுகாப்புப் படையினர் விடியற்காலையில் புகுந்து, உயர் உத்தரவுப்படி இந்த கோழைத்தனமான தாக்குதலை நடத்தியுள்ளனர். ராஜபக்ஷ அரசை வீட்டுக்கு அனுப்ப முற்படுவதற்கு எதிரான வெறியில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டதா என்பது எங்களுக்குத் தெரியாது. ஆனால் அது அவ்வாறு இல்லை என்று நினைக்க எந்த காரணமும் இல்லை.

போராடுவதற்கும் எதிர்ப்பு தெரிவிப்பதற்கும் நாட்டு மக்களுக்குள்ள ஜனநாயக உரிமையை நாங்கள் எப்போதும்



மதிக்கிறோம். அரச சொத்துக்கள் மற்றும் பொது சொத்துக்களை சேதப்படுத்தாமல், வன்முறைக்குப் பதிலாக நாகரீகமான போராட்டங்களுக்காக நாங்கள் தொடர்ந்து முன் நிற்கிறோம்.

ஒரு புறம் தற்போதைய ஜனாதிபதி ஆட்சிக்கு வருவதற்கு வழி வகுத்தது காலிமுகத்திடல் உட்பட இந்நாட்டு மக்கள் முன்னெடுத்த போராட்டத்தின் விளைவினாலாகும். எனினும் இந்த போராட்டம் அவரை ஜனாதிபதியாவதற்கு சிறிதும் ஊக்கமளிக்கவில்லை என்றாலும், அதன் மூலம் அவர் அதிகாரத்தைப் பெற்றார்.

தான் ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்து 12 மணித்தியாலங்கள் செல்வதற்கு முன் அதனை ஜனாதிபதி மறந்து விட்டார் என்பது வருத்தமளிக்கிறது என்பதோடு, ஒரு வேளை ராஜபக்ஷ ஆட்சி கவிழ்க்கப்பட்டமைக்கு போராட்டம் காரணமாக அமைந்ததன் கோபமாகக் கூட இருக்கலாம்.

முன்னைய ராஜபக்ஷ அரசாங்கம் நாகரீக நாடாக எழுந்து நிற்பதற்கான எல்லா சந்தர்ப்பங்களையும் அழித்தொழித்தது என்பதோடு, அதுவே தற்போதைய ராஜபக்ஷ நிழல் அரசாங்கத்தில் நடக்க ஆரம்பித்துள்ளது. ராஜபக்ஷ வெறியை விடவும் தீவிர வெறியாக மாறியிருப்பது தான் வித்தியாசமாக உள்ளது.

இந்த நாடு எவ்வளவு பாதாளப் படுகுழியில் வீழ்ந்துள்ளது என்பதை புரிந்து கொள்வதற்குப் பதிலாக, தனது அதிகாரத் திட்டத்துக்காக மட்டுமே செயல்படும் இந்த ராஜபக்ஷவின் நிழல் அரசாங்கம் மக்களின் அடிப்படை உரிமையான எதிர்ப்பு தெரிவிக்கும் உரிமை யையும், சுதந்திரத்தையும் மீறியுள்ளதோடு, ஊடகவியலாளர்களுக்கு உரித்தான சுதந்திரத்தையும் கொடூரமான முறையில் மீறியுள்ளது.

ஆயுதம் ஏந்தியவர்கள், அங்கவீனர்கள் மற்றும் பொது மக்கள் மீது ஆயுதம் ஏந்தி தாக்குதல் நடத்திய உத்தியோகபூர்வ மற்றும் உத்தியோகபூர்வமற்ற அனைத்து அதிகாரிகளுக்கும் எதிராக விசாரணைகள் நடத்தப்படவேண்டும் என்பதோடு, இந்த காட்டுமிராண்டித்தனமான தாக்குதலுக்கு உத்தரவிட்ட அனைவருக்கும் எதிராக உடனடியாக விசாரணை நடத்தப்பட வேண்டும்.

இந்த வெறுக்கத்தக்க மற்றும் கோழைத்தனமான தாக்குதலால் நாங்கள் மிகவும் அதிர்ச்சியடைந்துள்ளோம். தாக்குதலின் உள்ளார்ந்த வெறுப்புடன் அதைக் கண்டிக்கிறோம். நமது நாட்டை கோத்திர நிலைக்கு தள்ள முயலும் ராஜபக்ஷ நிழல் அரசுக்கு எதிராக முழு நாடும் எழுந்து நிற்கும் நாள் வெகு தொலைவில் இல்லை என்பதை அரசுக்கு வலியுறுத்துகிறோம்- என்றார். (அ)

---

# வவுனியாவில் ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் குழப்பநிலை

## பொலிஸார் தலையிட்டு தீர்வு

வவுனியா, ஜூலை 23

வவுனியா, பண்டாரவன்னியன் சதுக்கம் பகுதியில் உள்ள ஐஓசி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அரசாங்கத்தின் வாகன இலக்க நடைமுறையை அமுல்படுத்த முயன்றபோது ஏற்பட்ட குழப்ப நிலையை பொலிஸார் கட்டுப்படுத்தியிருந்தனர்.

வவுனியா, பண்டார வன்னியன் சதுக்கம் பகுதியில் அமைந்துள்ள ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அரசாங்க அறிவுறுத்தலுக்கு அமைய வாகனத்தின் கடைசி இலக்கத்தின் அடிப்படையில் நேற்று எரிபொருள் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதன்போது குறித்த எரிபொருள் நிரப்பு நிலையம் முன்பாக 3 தினங்களாக வரிசையில் நின்றோர் தமக்கு தான் எரிபொருள் வழங்கவேண்டும் என எரிபொருள் நிரப்பு நிலையத்தினர் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களிடம் கோரிக்கை விட்டனர். ஆனாலும் அரசாங்க அறிவுறுத்தலையே தம்மால் நடைமுறைப்படுத்த முடியும் என இரு பகுதியினரும் தெரிவித்தமையால், அங்கு குழப்ப நிலை ஏற்பட்டது.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு வருகை தந்த வவுனியா பொலிஸ் நிலைய தலைமைப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸார் ஒலி பெருக்கி மூலம் 6, 7, 8, 9 ஆகிய இலக்கங்களுக்கு மட்டுமே எரிபொருள் வழங்கப்படும் என அறிவித்தல் வழங்கியதுடன், அங்கு நின்ற ஏனைய இலக்க மோட்டர் சைக்கிள்கள், முச்சக்கர வண்டிகள், கார்கள் என்பவற்றை அகற்றி குழப்ப நிலையை கட்டுப்படுத்தியிருந்தனர். இதன்பின் சீராக எரிபொருள் விநியோகம் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

---

# நாட்டை வந்தடைந்தது எரிவாயு கப்பல் இம்மாத இறுதிக்குள் மேலும் 6 கப்பல்கள்

கொழும்பு, ஜூலை 23

எரிவாயு கப்பல் ஒன்று நாட்டை வந்தடைந்துள்ளதாக லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

அதற்கமைய, ஜூலை மாதத்தில் மாத்திரம் இதுவரை 5 கப்பல்கள் நாட்டை வந்தடைந்துள்ளதாகவும் அந்நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இம்மாத இறுதிக்குள் மேலும் 6 கப்பல்கள் நாட்டை வந்தடையவுள்ளதாகவும் லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது. அறிக்கை ஒன்றை வெளி யிட்டு லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் இதனைக் குறிப்பிட்டார். (அ)

---

# பொன்னாலை - புளியந்துறை காட்டுக்கு விசமிகள் தீ வைப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 23

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொன்னாலை - புளியந்துறை காட்டுக்கு இனந்தெரியாத நபர்கள் தீ மூட்டியுள்ளனர். இதனால் காடு தீப்பற்றி எரிந்தது.

இதன்போது வலி. மேற்கு பிரதேச சபைக்கு தகவல் வழங்கப்பட்டது. வழங்கிய தகவலின் அடிப்படையில் குறித்த பகுதிக்குச் சென்ற வலி. மேற்கு பிரதேச சபையினர் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

வலி. மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் அப் பகுதிக்கான கிராம சேவகர் ஆகியோர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று நிலைமையை பார்வையிட்டனர். (அ)

---

# காலிமுகத்திடல் தாக்குதலை எதிர்த்து யாழில் இன்று கண்டனப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

காலிமுகத்திடலில் இடம்பெற்ற தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவித்து யாழ்ப்பாணத்தில் இன்று கண்டனப் போராட்டமொன்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

"காலிமுகத்திடல் போராட்டகாரர்கள் மீதான ரணில் - ராஜபக்ஷக்களின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை வன்மையாக கண்டிப்போம்" எனும் தொனிப்பொருளில் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் இன்று மதியம் 1 மணிக்கு இந்த போராட்டம் இடம்பெறுமென மக்கள் விடுதலை முன்னணியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் தமிழர் சமூக ஜனநாயக கட்சியின் தலைவர் ஸ்ரீதரன், மின்சார சேவைச் சங்கத்தின் வடமாகாண இணைப்பாளர் க.இளங்குமரன், நல்லூர் சோசலிச இளைஞர் சங்க அமைப்பாளர் கே.சரவணன், பருத்தித்துறை சோசலிச இளைஞர் சங்க அமைப்பாளர் ச.கணேசரூபன் ஆகியோர் கலந்து கொண்டு இந்த போராட்டத்திற்கான அழைப்பை விடுத்தனர்.

காலிமுகத்திடல் கோட்டா கோ கம பகுதிக்குள் இன்று நுழைந்த முப்படையினர் மற்றும் பொலிஸார் அங்கிருக்கும் கொட்டகைகளை அகற்றியதுடன் போராட்டகாரர்களும் தாக்கப்பட்டனர். ஆகவே இந்த தாக்குதலை கண்டிக்கும் வகையிலேயே இந்த போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (அ)

---

# வவுனியா விவசாயிகளுக்கு யூரியா உரம் விநியோகம்

வவுனியா, ஜூலை 23

வவுனியா மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கையினை மேற்கொண்டுள்ள விவசாயிகளுக்கு இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட யூரியா உரம் வழங்கப்பட்டது.

வவுனியா மாவட்ட கமநல சேவை திணைக்களத்தினருக்கு கிடைக்கப் பெற்ற 49.5 மெற்றிக் தொன் உரத்தை விவசாயிகளுக்கு பங்கீட்டு வழங்கும் நடவடிக்கை கமநல சேவை திணைக்களத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் 50 நாட்களுக்கு குறைந்த நெற் பயிர்களுக்கு ஏக்கருக்கு 40 கிலோ யூரியாவும், 50 நாட்களுக்கு மேற்பட்ட நெற் பயிர்களுக்கு ஏக்கருக்கு 20 கிலோ யூரியாவும் ஒரு கிலோ யூரியா 200 ரூபாய் அடிப்படையில் வழங்கப்பட்டு வருகின்றது.

அரசாங்கத்தினால் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட யூரியா உரமே விவசாயிகளுக்கு இவ்வாறு வழங்கப்பட்டு வருகின்றது.

இந்த உரம் வழங்கும் முதற்கட்ட நடவடிக்கை செட்டிக்குளம், அருவித்தோட்டம், நேரியகுளம், பெரியநொச்சிக்குளம், பாவற்குளம் ஆகிய இடங்களில் முன்னெடுக்கப்பட்டன. இதே வேளை, தனியார் கடைகளில் 50 கிலோ யூரியா 38 ஆயிரம் தொடக்கம் 42 ஆயிரம் வரையில் விற்பனை யாகி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# புதிய ஜனாதிபதி பதவியேற்ற மறுநாளே இலங்கையின் ஜனநாயகத்துக்கு கரிநாள்

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் குற்றச்சாட்டு

**கொழும்பு, ஜூலை 23**

**புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற மறுநாளே காலிமுகத்திடலில் அமைதிப் போராட்டக் காரர்கள் மீது ஈவிரக்கமற்ற தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக தெரிவித்துள்ள இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி சாலிய பீரிஸ், இன்றைய நாள் நாட்டின் கறுப்பு நாள் எனவும் தெரிவித்துள்ளார்.**

இந்த தேவையற்ற ஈவிரக்க மற்ற பலப்பிரயோகம் இந்த நாட்டிற்கு எந்த வகையிலும் உதவியாக அமையாது. நாட்டின் கௌரவத்தையும் சர்வதேச அளவில் பாதிக்கச் செய்யும் எனவும் ருவிட்டரில் நேற்றுக் காலை அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

ஜனாதிபதி செயலகத்திற்கு அருகில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதல் இடம்பெற்றுள் ளதாக பல சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

விவரங்கள் இன்னமும் முழு மையாக கிடைக்காத போதி லும் பலர் கைது செய்யப்பட் டுள்ளதாகவும் பலர் தாக்கப்பட் டுள்ளதாகவும் எனக்கு தகவல் கள் கிடைக்கின்றன.

அதிகாரிகள் அனைவரின தும் பாதுகாப்பையும் உறுதி செய்ய வேண்டும். கைது செய்யப்பட்ட அனைவரும் எங்கு வைக்கப்பட்டுள்ளனர் என்பதை வெளிப்படுத்தவேண் டும்.

நான் பொலிஸ் மா அதிப ரைத் தொடர்பு கொள்ள முயற் சித்தேன். இராணுவத் தளபதிக் கும் செய்தி அனுப்பினேன். தேவையில்லாத மிருக பலத்தை பயன்படுத்துவது இந்த நாட் டுக்கும் அதன் சர்வதேசப் பிம்பத்துக்கும் உதவாது-என் றார். (அ)

## காலிமுகத்திடல் தாக்குதல் சம்பவம் விசாரணைக்கு விசேட குழு நியமனம்

கொழும்பு, ஜூலை 23

ஜனாதிபதி செயலக வளாகத்தில் ஏதேனும் குற்றச் செயல்கள் இடம்பெற்றிருந்தால் அதற்கான சாட்சியங்களைப் பெறுவதற்காக குற்றத்தடுப்பு அதிகாரிகள் மற்றும் கைரேகை அதிகாரிகள் அடங்கிய விசேட குழு அமைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்த குழு மத்திய கொழும்பு பொலிஸ் அத்தி யட்சகரின் மேற்பார்வையின் கீழ் செயற்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முப்படையினர், பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் இணைந்து நேற்று அதிகாலை ஜனாதிபதி செயலகம் மற்றும் பிரதான நுழைவா யில் உள்ளிட்ட வளாகங்களில் தங்கியிருந்த ஆர்ப்பாட்டக்காரர்களை அகற்றியவேளையில் 9 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலி ஸார் குறிப்பிட்டனர்.

இவர்கள் களனி, எம்பிலிப்பிட்டிய, ஜாஎல, இரத்தினபுரி, வெல்லம்பிட்டிய, வாதுவ, நுகேகொட ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 26 முதல் 58 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். (அ)

## பெற்றோலுடன் கப்பல் நாட்டை வந்தடைந்தது

கொழும்பு, ஜூலை 23

உலை எண்ணெய் மற்றும் பெற்றோலுடனான கப்பல் ஒன்று நேற்று முன் தினம் இலங்கை வந்ததாக மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர ருவிட்டர் செய்தியில் இதனை தெரிவித்துள்ளார்.

மேற்படி உலை எண்ணெய் மின் உற்பத்தி நடவடிக்கைகள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு விநியோகிக் கப்படவுள்ளதுடன், உரிய தரப் சோதனைகளின் பின்னர் இந்த நடவடிக்கைகள் நடைபெறும் என்றும் அதில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளது.

மேலும், வாகன இலக்கத்தட்டின் இறுதி இலக்க முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும், தேசிய எரிபொருள் அட்டைக்கான கியூ.ஆர் குறியீடு சரிபார்ப்பு மற்றும் பதிவு மேற்கொள்ளப்பட்டு வருவ தாகவும் அமைச்சர் கூறியுள்ளார். (அ)



## அல்லிப்பளையில் சட்டவிரோத மண் அகழ்வில் ஈடுபட்ட மூன்று பேர் கைது!

கிளிநொச்சி, ஜூலை. 23

கிளிநொச்சி பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அல்லிபளை பகுதியில் சட்டவிரோத மண் அகழ்வில் ஈடுபட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் மாலை 6 மணியளவில் குறித்த கைது இடம்பெற்றுள்ளது.

பளை விசேட பொலிஸ் புல னாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைவாக குறித்த பகுதி சுற்றிவளைக்கப் பட்டது.

இதன்போது, சட்டவிரோ தமாக மண் அகழ்வில் ஈடுபட் டிருந்த 3 உழவு இயந்திரங் களுடன், 03 சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைது செய்ய பட்டனர்.

சம்பவம் தொடர்பில் கிளி நொச்சி நீதிமன்றில் வழக்கு தாக் கல் செய்யப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## கொத்மலை நீர்த்தேக்கத்தில் இருந்து பாடசாலை மாணவி சடலமாக மீட்பு!

கொழும்பு, ஜூலை 23

தலவாக்கலை - மேல்கொத் மலை நீர்த்தேக்கத்திலிருந்து நேற்று பிற்பகல் பாடசாலை மாணவி ஒருவர் சடலமாக மீட் கப்பட்டுள்ளார்.

நீர்த்தேக்கத்தில் சடல மொன்று மிதப்பதைக்கண்டு பிரதேசவாசிகள் தலவாக்கலை பொலிஸாருக்கு அறிவித்துள் ளனர்.

இதனையடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்த பொலி ஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்ட மாணவி லிந்துலை - பெயார் பீல்ட் (மிளகுசேனை) தோட் டத்தைச் சேர்ந்த, லிந்துலை - சரஸ்வதி தமிழ் மகா வித்தி யாலயத்தில் உயர்தர வகுப்பில் கல்வி பயின்று வரும் 18 வயது டைய ஒருவரென அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் இவ்வருடம் க.பொ.த உயர்தர பரீட்சைக்கு தோற்ற விருந்தவரென தெரியவந்துள் ளது.

தனியார் வகுப்புக்காக செல் வதாக கூறிவிட்டு, நேற்றுக் காலை குறித்த மாணவி வீட்டி லிருந்து சென்றதாக அவரது வீட்டார் தலவாக்கலை பொலிஸ் நிலையத்தில் வாக்குமூலம் வழங்கியுள்ளனர்.

நுவரெலியா நீதிமன்ற நீதிவா னின் மரண விசாரணைகளின் பின் சடலம் பிரேத பரிசோத னைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

## வெள்ளவத்தை அடுக்குமாடியிலிருந்து தவறி விழுந்த இளைஞர் உயிரிழந்தார்

கொழும்பு, ஜூலை 23

வெள்ளவத்தை விவேகா னந்தா வீதியிலுள்ள அடுக்கு மாடி குடியிருப்பு ஒன்றில் இருந்து நேற்றுக் காலை தவறி விழுந்து நபர் ஒருவர் உயிரிழந் துள்ளார்.

உயிரிழந்தவர் மஹியங் கனை பகுதியைச் சேர்ந்த 37 வயதுடையவர் என அடை யாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் நிர்மாணிக் கப்பட்டு வரும் நான்கு மாடி அடுக்குமாடி குடியிருப்பில் வர்ணப் பூச்சாளராக பணியாற்றி வந்தவர் என்பது விசார ணை யில் தெரியவந்துள்ளது. (அ)

# அமைதி போராட்டக்காரர்கள் மீது வன்முறை; கண்டிக்கின்றது சர்வதேச மன்னிப்புச் சபை

கொழும்பு, ஜூலை 23

கொழும்பு - காலி முகத்திட லில் அரசுக்கு எதிராக அமைதி யான முறையில் போராட்டத் தில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது படைத்தரப்பினைப்பினரைப் பயன்படுத்தி வன்முறை கட்ட விழ்த்து விடப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்ள முடியாது என சர்வதேச மன்னிப்புச் சபை தெரி வித்துள்ளது.அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

கொழும்பில் அமைதியாக போராட்டத்தில் ஈடுபட்டுவந்த வர்கள் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலையில் பொலிஸ் மற்றும் இராணுவத்தால் சுற்றி வளைக் கப்பட்டு தாக்கப்பட்டதாக எங் களுக்குச் செய்திகள் வருகின்றன.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடு வதற்கான உரிமை பாதுகாக் கப்பட வேண்டும். இலங்கை அதிகாரிகள் உடனடியாக இந்த வன்முறை நடவடிக்கைகளை கைவிடவேண்டும். சட்ட விரோ தமாக கைது செய்யப் பட்டவர் களை விடுதலை செய்ய வேண்டும்.

அதிகாரிகள் ஊடக சுதந் திரத்தை பாதுகாக்கவேண்டும். ஊடகவியலாளர்கள் சம்பவ இடத்தில் தமது கடமைகளை செய்வதைத் தடுக்கக்கூடாது. இவ்வாறு செய்வது ஊடக சுதந்திரத்தை நேரடியாக மீறும் செயல்-என்று கூறியுள்ளது.

# போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தியோர் மீது சட்ட நடவடிக்கை!

## கொழும்பு பேராயர் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை. 23

காலி முகத்திடல் போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட சம்பவம் தொடர்பாக வெளிப்படையான விசாரணைகளை மேற்கொண்டு, சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுக்க சர்வதேச சமூகம் அழுத்தம் பிரயோகிக்க வேண்டும் என கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை வலியுறுத்தினார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக, நிராயுதபாணிகளாக ஜனநாயக ரீதியாக போராடிய நபர்கள் மீது, இன்று(நேற்று) அதிகாலை மிலேச்சத்தனமான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலால் பல இளைஞர்கள் காயமடைந்துள்ளதோடு, பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்று 24 மணிநேரம் முடிவும் முன்னர், மக்கள் மீது நடத்தப்பட்ட இந்த தாக்குதலை நாம் வன்மையாக கண்டிக்கிறோம்.

பாராளுமன்ற உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட்டுள்ள, மக்களால் முற்றாக நிராகரிக்கப்பட்ட ஒருவராகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க காணப்படுகிறார்.

அரசமைப்பை பாதுகாப்பதாக கூறி ஜனாதிபதியாக வந்துள்ள இவர், அரசமைப்பின் ஊடாக மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள விமர்சனம் செய்யும் மற்றும் எதிர்ப்பை வெளியிடும் உரிமையை இல்லாது செய்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக இருந்து, இன்றைய தினத்திற்குள் (நேற்று) வெளியேறுவோம் என போராட்டக்காரர்கள் கூறியிருந்தார்கள்.

இந்த நிலையில்தான் இவ்வாறான தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. எதிர்காலத்தில்



பாரதூரமான நிகழ்வுகள் நிகழுமாக இருந்தால் அதற்கான முழுப் பொறுப்பையும் ஜனாதிபதியே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இன்றைய தாக்குதலின்போது தேசிய மற்றும் சர்வதேச ஊடகவியலாளர்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதனையும் நாம் வன்மையாக கண்டிக்கிறோம்.

இதனால், எமது நாட்டுக்கு சர்வதேச ரீதியாக அவப்பெயர் வந்துள்ளது.

அமைதியாக போராடும் மக்களை இராணுவம் மற்றும் பொலிஸைக் கொண்டு அடக்க முற்படுவதை ஜனாதிபதி உள்ளிட்டவர்கள் உடனடியாக நிறுத்திக் கொள்ளவேண்டும்.

அத்தோடு, இன்று நடைபெற்ற இந்த அரசமைப்புக்கு முரணான தாக்குதல் சம்பவம் தொடர்பாக, சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருக்கும் எதிராக கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என சர்வதேச சமூகத்திடமும், சர்வதேச மனித உரிமை அமைப்புக்களிடமும் கேட்டுக் கொள்கிறோம்.

இந்த சம்பவம் தொடர்பாக பூரண விசாரணைகள் மேற்கொள்ளவும் இவர்கள் அழுத்தம் கொடுக்க வேண்டும்.- என்றார். (அ)

# நாட்டை வந்தடைந்தது சீனாவின் அரிசி கப்பல்

கொழும்பு, ஜூலை. 23

500 மில்லியன் யுவான் பெறுமதியான இரண்டு தொகுதிகளை கொண்ட 500 மெற்றிக் தொன் அரிசி நாட்டை வந்தடைந்துள்ளது.

இலங்கைக்கான சீனத் தூதரகம் இது தொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ளது.

இதற்கமைய, முதலாவது அரிசி தொகுதி கடந்த 16 ஆம் திகதியும் இரண்டாவது தொகுதி 19 ஆம் திகதி கொழும்பை வந்தடைந்துள்ளது.

இலங்கைக்கான சீனத் தூதரம் தனது உத்தியோகபூர்வ ருவிட்டர் பக்கத்தில் இதனை குறிப்பிட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கு உணவளிக்கும் திட்டத்தின் கீழ், 7,900 பாடசாலைகளில், 1.1 மில்லியன் சிறுவர்களுக்காக 3 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி கல்வி அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக சீன தூதரகம் தெரிவித்துள்ளது. (அ)

# எரிபொருள் அட்டைகளைப் பெறுவதற்கு வாகன உரிமை மாற்றம் அவசியமில்லை

## யாழ்.மாவட்ட செயலர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை. 23

யாழ்.மாவட்டத்தில் எரிபொருள் அட்டை பெறுவதற்கு வாகன உரிமை மாற்றம் அவசியம் இல்லை என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

மாவட்டத்தில் வாகன இலக்கத்தின் அடிப்படையில் பங்கீட்டு அட்டைக்கு எரிபொருள் விநியோகிக்கப்படும்



நிலையில் சில கிராம சேவையாளர்கள் வாகன உரிம மாற்றம் பெறாதவர்களுக்கு பங்கீட்டு அட்டையை விநியோகிக்க மறுப்பதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ள நிலை தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போதைய சூழ்நிலையில் மோட்டார் சைக்கிள்களுக்கு எரிபொருள் விநியோகிப்பதற்கு உரிமை மாற்றம் அவசியமானதாக கருதப்படவில்லை.

குறித்த பிரதேசத்தின் கிராம சேவையாளர் எரிபொருள் அட்டையை வழங்கும்போது தனது பிரிவில் உரிமை மாற்றம் பெறாதவர்களிடம் தற்காலிக உறுதிப்படுத்தல் கடிதங்களை பெற்று அவர்களுக்கு எரிபொருள் அட்டையை வழங்க முடியும் - என்றார். (அ)

# 1850 மில்லியன் டொலர்களை இலங்கைக்கு 10 ஆண்டுகளுக்குள் வழங்கியுள்ள இந்தியா

## அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் தகவல்



புதுடில்லி, ஜூலை. 23

கடந்த 10 ஆண்டுகளில் இந்தியா, இலங்கைக்கு 8 துறைகளுக்கு கடன்வரிகளை வழங்கியுள்ளதாக அந்த நாட்டின் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதன்படி 1850.64 மில்லியன் டொலர்களை இந்தியா, இலங்கைக்கு வழங்கியுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் நேற்று தெரிவித்துள்ளார்.

இந்த கடன்வரிகள், ரயில், உட்கட்டமைப்பு, பாதுகாப்பு, எரிசக்தி, பெற்றோலியம் மற்றும் உரம் போன்றவற்றுக்காக வழங்கப்பட்டுள்ளது என்று திராவிட முன்னேற்றக்கழக உறுப்பினர் ஒருவர் லோக்சபா வில் கேட்க கேள்விக்கான பதிலாக ஜெய்சங்கர் தெரிவித்தார்.

இந்தநிலையில் அயலில் உள்ளவருக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் இந்தியா, தொடர்ந்தும் இலங்கைக்கு உதவிகளை வழங்கி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

கடன் வரிகளுக்கு அப்பால் இந்தியா, இலங்கைக்கு மனிதாபிமான உதவிகளையும் வழங்கியுள்ளதாக ஜெய்சங்கர் தெரிவித்தார். (அ)

# எரிபொருள்கள் விநியோகத்துக்காக முறையான வேலைத்திட்டம் இல்லை

## தனியார் பஸ் உரிமையாளர்கள் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை. 23

தனியார் பஸ்களுக்கு எரிபொருள் நிரப்புவதற்கான முறையான திட்டமொன்று இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் குற்றஞ்சுமத்தியுள்ளது.

பஸ்களுக்கான எரிபொருள் விநியோகத்திற்கு முறையான வேலைத்திட்டமொன்று இன்மையால், பஸ் போக்குவரத்தை முன்னெடுப்பதில் சிக்கல் நிலை காணப்படுவதாக தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார். (அ)

# இலங்கையில் கொரோனா உயிரிழப்பு 16,536 ஆனாது!

கொழும்பு, ஜூலை. 23

இலங்கையில் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்தவர்களது எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளது.

நாட்டில் மேலும் ஒரு கோவிட் மரணம் பதிவாகியுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் இது வரை கோவிட் தொற்றால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 16,536 ஆக அதிகரித்துள்ளது. (அ)

# ஜனாதிபதி பதவிப் பிரமாணத்தில் மின்சாரம் துண்டிக்கப்படவில்லை

## பாராளுமன்ற படைக்கல சேவிதர் நிராகரிப்பு

கொழும்பு, ஜூலை. 23

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பதவிப் பிரமாண நிகழ்வின் போது மின்சாரம் துண்டிக்கப்பட்டதாக வெளியான தகவலை பாராளுமன்றத்தின் படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ நிராகரித்துள்ளார்.

மின்சாரத்தை இயக்க மின்பிறப்பாக்கி பயன்படுத்தப்பட்டு, அது வெற்றிகரமாக பிரதான மின்பாதைக்கு நகர்த்தப்பட்டது.

எனினும் அரச தொலைக்காட்சியின் நேரடி ஒளிபரப்பில் தடை ஏற்பட்டதாக தமக்கு தெரிவிக்கப்பட்டபோதும் என்ன தவறு நடந்தது என்று தமக்கு தெரியவில்லை என்றும் படைக்கல சேவிதர் குறிப்பிட்டார்.

எனினும் பாராளுமன்றத்தில் மின்தடை ஏற்படவில்லை என உறுதியாக கூறமுடியும் என்றும் பாராளுமன்றத்தின் படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ கூறினார். (அ)

# ராணுவம் நள்ளிரவில் போராட்டக்காரர்கள் மீது தாக்குதல்:

## பிபிசி தமிழ் செய்தியாளரும் தாக்கப்பட்டார்!

இலங்கையில் பாதுகாப்புப் படையினர் தலைநகர் கொழும்புவில் உள்ள முக்கிய அரசாங்க எதிர்ப்புப் போராட்ட முகாம்கள் மீது தாக்குதல் நடத்தி கூடாரங்களை அகற்றத் தொடங்கியுள்ளனர்.

ஜனாதிபதி அலுவலகத்திற்கு வெளியே இருந்த போராட்டக்காரர்கள் அந்தப் பகுதியை விட்டு வெளியேறுவதற்குச் சில மணிநேரத்திற்கு முன்னதாக, நூற்றுக்கணக்கான துருப்புகள் மற்றும் பொலிஸ் கமாண்டோக்கள் போராட்டக்காரர்களை நோக்கி திடீரென தாக்குதல் நடத்தத் தொடங்கினர்.

பிபிசி செய்தியாளர்கள் மணிகண்டன், அன்பரசன் எத்திராஜன், ஜெரின் சாமுவேல் ஆகியோர் பிபிசி நேரலையில் செய்திகளை வழங்கிக் கொண்டிருந்தபோது, வீடியோ செய்தியாளர் ஜெரின் ராணுவத்தால் தாக்கப்பட்டார். அதோடு, ராணுவ வீரர் ஒருவர் அவருடைய கைபேசியைப் பறித்து, அதிலிருந்து வீடியோக்களை அழித்தார்.



ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்துகொண்ட பிறகு இது நிகழ்ந்துள்ளது.

இலங்கையின் முன்னாள் அதிபர் கோட்டாபய ராஜபக்ஷ கடந்த வாரம் 13ஆம் திகதியன்று நாட்டை விட்டு வெளியேறினார். அதன்பின்னர், சிங்கப்பூரிலிருந்து தனது ராஜினாமாவை கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்திருந்தார்.

அதைத் தொடர்ந்து, கடந்த 15ஆம் திகதியன்று ரணில் விக்ரமசிங்க பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டு, 20ஆம் திகதியன்று நாடாளுமன்ற வாக்கெடுப்பின் மூலம் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

முன்னாள் பிரதமரான ரணில் விக்ரமசிங்க, பொதுமக்களிடம் செல்வாக்கு இல்லாதவராகக் காணப்படுகிறார். மேலும், போராட்டக்காரர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் உறுதியளித்தார்.

நாட்டின் நிதியைத் தவறாகக் கையாண்டமைக்காக ராஜபக்ஷ நிராகத்தின் மீது பலர் குற்றம் சாட்டுகிறார்கள். மேலும், ரணில் விக்ரமசிங்கவை பிரச்னையின் ஒரு பகுதியாகப் பார்க்கிறார்கள். ஆனால், அவர் நாடாளுமன்ற வாக்கெடுப்பில் வெற்றி பெற்ற மறு நாளே தெருக்களில் சில ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

விக்ரமசிங்க பதவியேற்ற உடனேயே, அரசாங்கத்தைக் கவிழ்க்க அல்லது அரசாங்க கட்டடங்களை ஆக்கிரமிப்பதற்கான எந்தவொரு முயற்சியும் ஜனநாயகம் இல்லை என்பதைத் தெளிவுபடுத்தியதோடு, அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் மீது சட்டத்தின்படி கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்தார்.

### ராணுவத்தால் கலைக்கப்பட்ட போராட்டக்காரர்கள்

எதிர்ப்பு இயக்கத்தை விரைவில் அரசாங்கம் படிப்படியாக ஒடுக்கக்கூடும் என்று போராட்டக்காரர்கள் மத்தியில் கவலைகள் இருந்தன. ஜனாதிபதி செயலகத்தின் வளாகம் மாத்திரம் போராட்டக்காரர்களின் வசமிருந்த நிலையில், அதை இன்று மதியம் அரசாங்கத்திடம் கையளிக்க போராட்டக்காரர்கள் தீர்மானித்திருந்தனர்.

இருப்பினும், இலங்கையில் ஜனாதிபதி செயலகத்தை கடந்த 104 நாட்களாக முற்றுகையிட்டு போராட்டம் நடத்தி வந்த போராட்டகாரர்கள், நேற்று (22-07-2022) அதிகாலை ராணுவத்தால் கலைக்கப்பட்டுள்ளனர். ராணுவம் உள்ளிட்ட படை வீரர்களை ஈடுபடுத்தி, அரசாங்கம் ஜனாதிபதி செயலகம் மற்றும் அதை அண்மித்த வளாகத்தைத் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளது.

ஜனாதிபதி செயலகத்தை அண்மித்த பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு திடீரென ஆயிரக்கணக்கான ஆயுதம் ஏந்திய ராணுவம் மற்றும் பொலிஸார் வரழைக்கப்பட்டனர்.

இதையடுத்து, ஜனாதிபதி செயலகத்திற்குள் பிரவேசிக்கும் அனைத்து வீதிகளையும் ராணுவத்தினர், தடுப்பு வேலிகளை அமைத்து மூடியிருந்தனர்.

அதன்பின்னர், திடீரென ஜனாதிபதி செயலக வளாகத்திற்கு வருகை தந்த ராணுவம், அங்கு போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் மீது தாக்குதல் நடத்தி, அவர்களை அங்கிருந்து கலைந்து செல்லுமாறு வலியுறுத்தினர்.



ராணுவத்தின் தடியடி தாக்குதலை அடுத்து, போராட்டத்தில் ஈடுபட்டிருந்த இளைஞர், யுவதிகள், ஜனாதிபதி செய லக வளாகத்தை விட்டு வெளியேறியிருந் தனர்.

### பிபிசி செய்தியாளர் மீது தாக்குதல்

ஜனாதிபதி செயலகத்தை அண்மித்த பகுதியிலிருந்து இளைஞர், யுவதிகள் வெளியேற்றப்பட்டதை அடுத்து, அங்கு அமைக்கப்பட்டிருந்த கூடாரங்களை பாதுகாப்புப் படையினர் அப்புறப்ப டுத்த நடவடிக்கை எடுத்திருந்தனர்.

இந்நிலையில், போராட்டக்காரர் களை கலைப்பதற்காக ராணுவம் கடமை களில் ஈடுபடுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில், பிபிசி தமிழ் பேஸ்புக் பக்கத்தின் ஊடாக நேரடி ஒளிபரப்பை வழங்கிக் கொண்டிருந்தோம்.

இதன்போது, ராணுவம் உள்ளிட்ட பாதுகாப்புப் பிரிவினர், பிபிசி தமிழ் செய்தியாளர் மணிகண்டன் மற்றும் வீடியோ செய்தியாளார் ஜெரினின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்திருந்தனர்.

அதைத் தொடர்ந்து, நாம் பிபிசி செய்தியாளர்கள் என்று எமது செய்தியாளர்கள் கூறி பாதுகாப்புப் பிரிவிற்கு தெளிவூட்டல் களை வழங்க முயன்ற சந்தர்ப்பத்தில், ஊடக கடமைகளுக்கு மீண்டும் மீண்டும் இடையூறு விளைவித்தனர்.

அதன் பின்னர், பிபிசி தமிழ் வீடியோ செய்தியாளர் ஜெரின் மீது ராணுவத் தினர் தாக்குதல் நடத்தியதுடன், ஜெரினுடைய வயிற்றின் மீது ராணுவ அதிகாரியொருவர் தனது பாதணி அணிந்த பாதங் களினால் தாக்குதல் நடத்தி யுள்ளார்.

இதையடுத்து, ஏனைய பிபிசி செய்தியாளர்களின் உதவியுடன், தாக்குதலுக்கு இலக்கான செய்தியாளர் அருகிலுள்ள நட்சத்திர விடுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டதுடன், அவரை மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டது.

குறித்த பகுதியைச் சூழ பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டமையினால், வாகனங்கள் உள்ளே பிரவேசிப்பதற்கும் வெளியேறுவதற்கும் முடியாத நிலைமை காணப்பட்டது.

அதன்பின்னர், 1990 என்ற இலவச ஆம்புலன்ஸ் சேவைக்கு அழைப்பை மேற்கொண்டு, தாக்குதலுக்கு இலக்கான எமது செய்தியாளரை மருத்துவம னைக்குக் கொண்டு செல்ல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.



ஆம்புலன்ஸ் குறித்த பகுதிக்கு வருகை தந்து, பிபிசி செய்தியாளரை கொழும்பிலுள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்க உதவியது.

இந்நிலையில், குறித்த ஊடகவியலாளருக்கு தனியார் மருத்துவமனையில் சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

காவல்துறை செய்தித்தொடர்பாளர் எஸ்.எஸ்.பி.நிஹல் தல்டுவா பிபிசி செய்தியாளர் தாக்கப்பட்டது குறித்து தனக்குத் தெரியவில்லை என்றும் அது குறித்து விசாரிப்பதாகவும் கூறியுள்ளார்.

இதேவேளை, கொழும்பின் பிரதான பகுதிகளில் தற்போது பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது. **(பிபிசி)**

# ராணுவம் நள்ளிரவில் போராட்டக்காரர்கள் மீது தாக்குதல்:

## பிபிசி தமிழ் செய்தியாளரும் தாக்கப்பட்டார்!

இலங்கையில் பாதுகாப்புப் படையினர் தலைநகர் கொழும்புவில் உள்ள முக்கிய அரசாங்க எதிர்ப்புப் போராட்ட முகாம்கள் மீது தாக்குதல் நடத்தி கூடாரங்களை அகற்றத் தொடங்கியுள்ளனர்.

ஜனாதிபதி அலுவலகத்திற்கு வெளியே இருந்த போராட்டக்காரர்கள் அந்தப் பகுதியை விட்டு வெளியேறுவதற்குச் சில மணிநேரத்திற்கு முன்னதாக, நூற்றுக்கணக்கான துருப்புகள் மற்றும் பொலிஸ் கமாண்டோக்கள் போராட்டக்காரர்களை நோக்கி திடீரென தாக்குதல் நடத்தத் தொடங்கினர்.

பிபிசி செய்தியாளர்கள் மணிகண்டன், அன்பரசன் எத்திராஜன், ஜெரின் சாமுவேல் ஆகியோர் பிபிசி நேரலையில் செய்திகளை வழங்கிக் கொண்டிருந்தபோது, வீடியோ செய்தியாளர் ஜெரின் ராணுவத்தால் தாக்கப்பட்டார். அதோடு, ராணுவ வீரர் ஒருவர் அவருடைய கைபேசியைப் பறித்து, அதிலிருந்து வீடியோக்களை அழித்தார்.



ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்துகொண்ட பிறகு இது நிகழ்ந்துள்ளது.

இலங்கையின் முன்னாள் அதிபர் கோட்டாபய ராஜபக்ஷ கடந்த வாரம் 13ஆம் திகதியன்று நாட்டை விட்டு வெளியேறினார். அதன்பின்னர், சிங்கப்பூரிலிருந்து தனது ராஜினாமாவை கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்திருந்தார்.

அதைத் தொடர்ந்து, கடந்த 15ஆம் திகதியன்று ரணில் விக்ரமசிங்க பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டு, 20ஆம் திகதியன்று நாடாளுமன்ற வாக்கெடுப்பின் மூலம் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

முன்னாள் பிரதமரான ரணில் விக்ரமசிங்க, பொதுமக்களிடம் செல்வாக்கு இல்லாதவராகக் காணப்படுகிறார். மேலும், போராட்டக்காரர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் உறுதியளித்தார்.

நாட்டின் நிதியைத் தவறாகக் கையாண்டமைக்காக ராஜபக்ஷ நிராகத்தின் மீது பலர் குற்றம் சாட்டுகிறார்கள். மேலும், ரணில் விக்ரமசிங்கவை பிரச்னையின் ஒரு பகுதியாகப் பார்க்கிறார்கள். ஆனால், அவர் நாடாளுமன்ற வாக்கெடுப்பில் வெற்றி பெற்ற மறு நாளே தெருக்களில் சில ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

விக்ரமசிங்க பதவியேற்ற உடனேயே, அரசாங்கத்தைக் கவிழ்க்க அல்லது அரசாங்க கட்டடங்களை ஆக்கிரமிப்பதற்கான எந்தவொரு முயற்சியும் ஜனநாயகம் இல்லை என்பதைத் தெளிவுபடுத்தியதோடு, அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் மீது சட்டத்தின்படி கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்தார்.

### ராணுவத்தால் கலைக்கப்பட்ட போராட்டக்காரர்கள்

எதிர்ப்பு இயக்கத்தை விரைவில் அரசாங்கம் படிப்படியாக ஒடுக்கக்கூடும் என்று போராட்டக்காரர்கள் மத்தியில் கவலைகள் இருந்தன. ஜனாதிபதி செயலகத்தின் வளாகம் மாத்திரம் போராட்டக்காரர்களின் வசமிருந்த நிலையில், அதை இன்று மதியம் அரசாங்கத்திடம் கையளிக்க போராட்டக்காரர்கள் தீர்மானித்திருந்தனர்.

இருப்பினும், இலங்கையில் ஜனாதிபதி செயலகத்தை கடந்த 104 நாட்களாக முற்றுகையிட்டு போராட்டம் நடத்தி வந்த போராட்டகாரர்கள், நேற்று (22-07-2022) அதிகாலை ராணுவத்தால் கலைக்கப்பட்டுள்ளனர். ராணுவம் உள்ளிட்ட படை வீரர்களை ஈடுபடுத்தி, அரசாங்கம் ஜனாதிபதி செயலகம் மற்றும் அதை அண்மித்த வளாகத்தைத் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளது.

ஜனாதிபதி செயலகத்தை அண்மித்த பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு திடீரென ஆயிரக்கணக்கான ஆயுதம் ஏந்திய ராணுவம் மற்றும் பொலிஸார் வரழைக்கப்பட்டனர்.

இதையடுத்து, ஜனாதிபதி செயலகத்திற்குள் பிரவேசிக்கும் அனைத்து வீதிகளையும் ராணுவத்தினர், தடுப்பு வேலிகளை அமைத்து மூடியிருந்தனர்.

அதன்பின்னர், திடீரென ஜனாதிபதி செயலக வளாகத்திற்கு வருகை தந்த ராணுவம், அங்கு போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் மீது தாக்குதல் நடத்தி, அவர்களை அங்கிருந்து கலைந்து செல்லுமாறு வலியுறுத்தினர்.





ராணுவத்தின் தடியடி தாக்குதலை அடுத்து, போராட்டத்தில் ஈடுபட்டிருந்த இளைஞர், யுவதிகள், ஜனாதிபதி செய லக வளாகத்தை விட்டு வெளியேறியிருந் தனர்.

### பிபிசி செய்தியாளர் மீது தாக்குதல்

ஜனாதிபதி செயலகத்தை அண்மித்த பகுதியிலிருந்து இளைஞர், யுவதிகள் வெளியேற்றப்பட்டதை அடுத்து, அங்கு அமைக்கப்பட்டிருந்த கூடாரங்களை பாதுகாப்புப் படையினர் அப்புறப்ப டுத்த நடவடிக்கை எடுத்திருந்தனர்.

இந்நிலையில், போராட்டக்காரர் களை கலைப்பதற்காக ராணுவம் கடமை களில் ஈடுபடுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில், பிபிசி தமிழ் பேஸ்புக் பக்கத்தின் ஊடாக நேரடி ஒளிபரப்பை வழங்கிக் கொண்டிருந்தோம்.

இதன்போது, ராணுவம் உள்ளிட்ட பாதுகாப்புப் பிரிவினர், பிபிசி தமிழ் செய்தியாளர் மணிகண்டன் மற்றும் வீடியோ செய்தியாளார் ஜெரினின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்திருந்தனர்.

அதைத் தொடர்ந்து, நாம் பிபிசி செய்தியாளர்கள் என்று எமது செய்தியாளர்கள் கூறி பாதுகாப்புப் பிரிவிற்கு தெளிவூட்டல் களை வழங்க முயன்ற சந்தர்ப்பத்தில், ஊடக கடமைகளுக்கு மீண்டும் மீண்டும் இடையூறு விளைவித்தனர்.

அதன் பின்னர், பிபிசி தமிழ் வீடியோ செய்தியாளர் ஜெரின் மீது ராணுவத் தினர் தாக்குதல் நடத்தியதுடன், ஜெரினுடைய வயிற்றின் மீது ராணுவ அதிகாரியொருவர் தனது பாதணி அணிந்த பாதங் களினால் தாக்குதல் நடத்தி யுள்ளார்.

இதையடுத்து, ஏனைய பிபிசி செய்தியாளர்களின் உதவியுடன், தாக்குதலுக்கு இலக்கான செய்தியாளர் அருகிலுள்ள நட்சத்திர விடுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டதுடன், அவரை மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டது.

குறித்த பகுதியைச் சூழ பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டமையினால், வாகனங்கள் உள்ளே பிரவேசிப்பதற்கும் வெளியேறுவதற்கும் முடியாத நிலைமை காணப்பட்டது.

அதன்பின்னர், 1990 என்ற இலவச ஆம்புலன்ஸ் சேவைக்கு அழைப்பை மேற்கொண்டு, தாக்குதலுக்கு இலக்கான எமது செய்தியாளரை மருத்துவம னைக்குக் கொண்டு செல்ல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆம்புலன்ஸ் குறித்த பகுதிக்கு வருகை தந்து, பிபிசி செய்தியாளரை கொழும்பிலுள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்க உதவியது.

இந்நிலையில், குறித்த ஊடகவியலாளருக்கு தனியார் மருத்துவமனையில் சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

காவல்துறை செய்தித்தொடர்பாளர் எஸ்.எஸ்.பி.நிஹல் தல்டுவா பிபிசி செய்தியாளர் தாக்கப்பட்டது குறித்து தனக்குத் தெரியவில்லை என்றும் அது குறித்து விசாரிப்பதாகவும் கூறியுள்ளார்.

இதேவேளை, கொழும்பின் பிரதான பகுதிகளில் தற்போது பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது. **(பிபிசி)**

# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்


● 1, 2 ஆகிய வினாக்களில் முதலில் தரப்பட்ட பகுதியைப் பூரணப்படுத்துவதற்குரிய மீதிப்பகுதியைத் தெரிவு செய்க.

01. வண்ணத்துப்பூச்சியின் ஒருபகுதி முன்னே தரப்பட்டுள்ளது.



(1) (2) (3)

02.



(1) (2) (3)

03. இங்குள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள பிராணிகளை மூன்று கூட்டங்களாகப் பிரிக்கலாம்.



A B C D E F

இக் கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) A, C / D, E / B, F

(2) A, E / B, C / D, F

(3) C, F / B, D / A, E

04. "பல்கலைக்கழகம்" எனும் சொல்லிலுள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி ஆக்கக் கூடிய சொற்களைக் கொண்ட விடைத் தொகுதி எது?

(1) பல், பழம், பகல், கழகம், காலை, கல், பாகல்

(2) பல், கல்வி, பகல், கழகம், கலை, கல், பக்கம்

(3) பல், பழம், பகல், கழகம், கலை, கல், பக்கம்


05. சந்திரன் தோன்றாத ஒரு நாளில் நள்ளிரவில் வீட்டிலிருந்து வெளியே வந்து வானத்தைப் பார்க்கும்போது தொலைவில் உள்ள வானில் பறந்து செல்லும் கிளிக் கூட்டத்தைக் காணலாம் எனக் காவியா கூறுகின்றாள். இது நடைபெற இயலாது இதற்குக் காரணம்

(1) இருளில் அத்தகைய ஒரு நிகழ்ச்சியைப் பார்க்க முடியாமை.

(2) இரவில் கிளிகள் பறந்து செல்ல வேண்டிய தேவை இல்லை.

(3) கிளிகள் கூட்டமாகப் பறந்து செல்லாமை.

06. உருக்கோலத்தில் அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிக.



(1) (2) (3)

07. உலக மரபுரிமை மையங்களாக ........................ நிறுவனத்தால் இலங்கையில் பாரம்பரிய இடங்கள் எனப் பிரகடனப்படுத்தப்பட்டன. அவற்றுள் பொலன்னறுவை புராதன நகரம், அனுராதபுரம் புனிதநகரம், சிகிரியா புராதன நகரம், .............................. போன்றவை சில இடங்களாகும்.

முதலாம் வெற்றிடத்திற்கும் இரண்டாம் வெற்றிடத்திற்கும் முறையே மிகப் பொருத்தமான சோடிச் சொற்களை தெரிவு செய்க.

(1) யுனிசெப், காலிக்கோட்டை

(2) யுனேஸ்கோ, யாழ்கோட்டை


(3) யுனெஸ்கோ, தங்கக்கோயில் (கோல்டன் டெம்பிள்)

## விடைகள்

01. (3)



02. (1)



03. (3) C, F / B, D / A, E

---

**கல்வி tv CHANNEL-1**

**23.07.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

**கல்வி tv CHANNEL - 2**

**23.07.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | Singalam |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# போராட்டக்காரர்கள் மீதான தாக்குதலுக்கு கிழக்கு மாகாண மக்கள் ஒன்றியம் கண்டனம்

திருமலை, ஜூலை 23

தமது உரிமைகளை கோரி காலி முகத்திடலில் அமைதியான முறையில் போராட்டங்களை நடத்தி வந்த போராட்டக்காரர்கள் மீது தொடுக்கப்பட்ட வன்முறை சம்பவங்களை கிழக்கு மக்கள் ஒன்றியம் முற்றிலும் கண்டிப்பதாக தெரிவித்துள்ளது.

கிழக்கு மக்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் செய்தியாளர் சந்திப்பு நேற்று திருமலை மாவட்ட ஊடக இல்லத்தில் இடம்பெற்றது.

இதன்போது கருத்து வெளியிட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் குறித்த சங்கத்தின் ஒருங்கிணைப்பாளருமான ஜயந்த விஜேசகர,

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமரானபோது தடை இன்றி எரிபொருள் மற்றும் எரிவாயு என்பனவற்றை வழங்குவதாக உறுதியளித்திருந்தார். எனினும் தாம் ஜனாதிபதி ஆனதன் பின்னர் பொதுமக்களைப் பற்றி சிந்திக்காது தமது அரசியல் தந்திரோபாயங்களை பயன்படுத்தி அமைச்சுப் பதவிகளை வழங்கி தமது ஆட்டத்தை ஆரம்பித்திருக்கிறார். இதனை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்.

அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை கலைப்பதற்கு ஜனாதிபதி அவர்கள் முப்படையினரை பயன்படுத்திய அதேவேளை, அவர்களுக்குள் கண்களை கட்டிக்கொண்டு கறுப்புநிற முகமூடி அணிந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை தாக்கியவர்கள் யார்?

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் அல்லர். ராஜபக்ஷக்களின் மறு உருவமே. இதனை அனைவரும் புரிந்து கொள்ளவேண்டும். போராட்டத்தை கைவிடாது தொடர்ச்சியாக முன்னெடுக்க அனைவரும் முன்வரவேண்டும்-என்றார். (அ)

# பின்வாசல் வழியாக பதவிக்கு வந்தவர் அடக்குமுறை திட்டங்களை வகுக்கிறார்

## குமார் குணரட்னம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 23

**அரசியலமைப்புச் சட்டத்தின் பாதுகாவலன் என காட்டிக்கொள்ளும் ரணில் விக்ரமசிங்க, அந்த அரசியலமைப்புச் சட்டத்துக்குள் இருக்கும் பேச்சுரிமை மற்றும் ஆர்ப்பாட்டம் நடத்தும் உரிமைகளைக் கோழைத்தனமான தாக்குதல் ஊடாக சவாலுக்கு உட்படுத்தியுள்ளதாக முன்னிலை சோசலிசக் கட்சியின் பிரதான செயலாளர் குமார் குணரட்னம் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போதைய பாராளுமன்றத்திற்குள் மக்களின் நிலைப்பாடுகள் பிரதிநிதித்துவப் படுத்தப்படவில்லை. இதனால், அரசாங்கத்தின் அடக்குமுறைக்கு எதிராக சகல அரசியல் கட்சிகளும் ஒருங்கிணையவேண்டும்.

மக்களின் ஆணையின்றி பின்வாசல் கதவு வழியாக ஜனாதிபதி பதவிக்குள் புகுந்த நபர், மக்களை அடக்கும் திட்டங்களை வகுத்து வருகிறார்.

அடக்குமுறைக்கு அஞ்சி தப்பியோடாது ஒருங்கிணையுமாறு மக்களிடம் கோரிக்கை விடுக்கின்றேன்.

காலிமுகத்திடல் போராட்டகாரர்கள் மீது அதிகாலை மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் கலந்துகொண்ட பாதுகாப்பு படையினர் எனக் கூறிக்கொண்டவர்கள், முகத்தை மூடியவாறு அடையாளம் காண முடியாதபடி தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதன்போது முகத்தை மூடிக்கொண்ட நபர்களின் தாக்குதலை படையினர் தடுக்கும் விதத்தை காணலாம்-என்றார். (அ)

# உணவு ஒவ்வாமை காரணமாக 11 சிறுவர்கள் மருத்துவமனையில்

திருமலை, ஜூலை. 23

திருகோணமலை-பாலையூற்றுப் பகுதியில் உணவு ஒவ்வாமை காரணமாக, 11 சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் அனைவரும், திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தலைக்கு பூசும் திரவம் கலந்த எண்ணெய் சேர்க்கப்பட்ட உணவை உட்கொண்டமையால் குறித்த சிறார்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# புதுக்குடியிருப்புப் பகுதியில் நேற்று எரிவாயு விநியோகத்தில் முரண்பாடு

முல்லைத்தீவு, ஜூலை. 23

நீண்ட நாட்களுக்கு பின் புதுக்குடியிருப்பு மக்களுக்கு 500 சமையல் எரிவாயு கொள்கலன்கள் வழங்கப்பட்டுள்ளன. எரிவாயு கொள்கலன்களை கிராமங்கள் தோறும் கிராம சேவையாளர்களால் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு, ரோக்கன் முறைப்படி எரிவாயு வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

கிடைக்கப்பெற்ற எரிவாயுவில் அரச உத்தியோகத்தர்களுக்கு 170 என ஒதுக்கப்பட்டபோதும் அதிகளவான மக்கள் கூட்டத்தினால் அரச உத்தியோகத்தர்களுக்கும் மக்களுக்கும் இடையில் முரண்பாடான நிலை ஏற்பட்டது. அதிகளவிலான மக்கள் எரிவாயுவை பெற்றுக் கொள்ள வந்திருந்த நிலையில் அவர்களுக்கு எரிவாயு கிடைக்காமையால் எரிவாயு வாகனத்தை நகரவிடாமல் சூழ்ந்து கொண்டனர்.

பிரதேச செயலாளர் எஸ்.ஜெயகாந் சம்பவ இடத்திற்கு வருகை தந்து அரச உத்தியோகத்தர்களுக்கு வைத்திருந்த எரிவாயுவில் ஒரு தொகுதியை மக்களுக்கு வழங்குவதாக உறுதியளித்தபோது மழை பெய்யத் தொடங்கியது. இருந்தும் வருகை தந்த மக்கள் அனைவரும் தங்களுக்கு எரிவாயு கிடைக்கவேண்டும் என சூழ்ந்து கொண்டதால் கொட்டும் மழையிலும் எரிவாயு விநியோகம் நடைபெற்றது. (அ)

# மஹ்ரூப்பின் நினைவு தினம்

திருமலை, ஜூலை. 23

திருகோணமலை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் துறைமுகங்கள் கப்பல் துறை முன்னாள் இராஜாங்க அமைச்சருமான காலம் சென்ற எம்.ஈ.எச்.எம். மஹ்ரூப்பின் 25 ஆவது வருட நினைவு தின நிகழ்வும், துஆ பிரார்த்தனையும், கிண்ணியா குறிஞ்சாக்கேணி தாருல் உலூம் ஜூம்மா பள்ளி வாசலில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர், இம்ரான் மஹ்ரூபின் ஆலோசனைகளுக்கு அமைய இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் முன்னாள் நகர சபை தவிசாளர் எஸ்.எச்.எம்.நளீம், கிண்ணியா மீனவர் சமாஜத்தின் தலைவர் எம்.பாயிஸ், பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூபின் பிரத்தியேக செயலாளர் சதாத் கரீம் மற்றும் மௌலவிமார்கள் பலர் கலந்துகொண்டனர்.

எம்.ஈ.எச்.மஹ்ரூப், 1997.07.20 ஆம் திகதி நிலாவெளிப் பகுதியில் படுகொலை செய்யப்பட்டார். அவருடன் இன்னும் நால்வரும் படுகொலை செய்யப்பட்டனர். (அ)

# எரிபொருள் வரிசையில் காத்திருந்த மற்றுமொரு நபர் நேற்று உயிரிழப்பு!

மட்டக்களப்பு, ஜூலை 23

கிண்ணியாவில் எரிபொருள் வரிசையில் காத்திருந்த நபர் உயிரிழந்துள்ளார்.

கிண்ணியா ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக வரிசையில் காத்திருந்த ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் திடீர் சுகயீனம் காரணமாக கிண்ணியா ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

சம்பவத்தில் கிண்ணியா - முனைச்சேனை பகுதியைச் சேர்ந்த 58 வயதுடைய ஒருவரே உயிரிழந்துள்ளார். (அ)


# மரண அறிவித்தல்

அன்னை மடியில் 09 - 01 - 1953



ஆண்டவன் அடியில் 19 - 07 - 2022

## புவனேந்திரதாஸ் சிவகுரு

நல்லூர் வடக்கை பிறப்பிடமாகவும், நுணாவில் மேற்கை வசிப்பிடமாகவும், பிரான்ஸ் Paris ஐ தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு புவனேந்திரதாஸ் அவர்கள் 19.07.2022 செவ்வாய்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுரு - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராமலிங்கம் - அன்னபூரணம் தம்பதிகளின் அன்பு மருமகனும், இந்திராணி அவர்களின் அன்புக் கணவரும், லக்க்ஷி அவர்களின் ஆசை தந்தையும், பராசக்தி, மோகனதாசன், மனோகரதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரரும், பத்மநாதன், மொறின், காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, செல்வராணி மற்றும் நாகேஸ்வரி, அற்புதராணி, காலஞ்சென்ற புஸ்பராணி, நேசராணி, ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

கிரியை

Tuesday, 26 Jul 2022 1:00 PM - 2:30 PM

Funérarium 28 Rue de Groslay, 95160 Paris, France

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு

**மோகனதாசன் - சகோதரன்**

Mobile : +94777350793

**பத்மநாதன் - மைத்துனர்**

Mobile : +16479923973

தகவல்:

**பத்மநாதன் - மைத்துனர்.**

# கருங்கடல் துறைமுகங்கள் மீளத் திறக்கப்படுகின்றன?

## • தானிய ஏற்றுமதிகள் தயார் நிலை
## • கோதுமையின் விலை 3 வீதம் சரிவு

மொஸ்கோ, ஜூலை 23

தானியம் ஏற்றுமதிக்காக உக்ரைனின் கருங்கடல் துறைமுகங்கள் திறக்கப்படவுள்ளன. இதற்கான ஒப்பந்தத்தில் துருக்கியின் மத்தியஸ்தத்துடன் ரஷ்யா - உக்ரைன் நாடுகள் ஐ. நா. முன்னிலையில் நேற்று கையொப்பமிடவிருந்தன. (எனினும் இந்த செய்தி எழுதப் படும்வரை ஒப்பந்தம் கைச்சாத்தாக வில்லை)

ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட விருந்தமையால் நேற்றைய தினமே கோதுமையின் விலை கணிசமாகக் குறைந்துள்ளது. கோதுமையின் விலை 3 வீதத்தில் வீழ்ச்சியடைந்த தாக தெரிய வருகின்றது.

ஏற்றுமதித் தடை நீக்கப்படு வதன் மூலம் சர்வதேச சந்தையில் உணவு நெருக்கடியையும் அதனால் எழுந் துள்ள விலையுயர்வையும் குறைக்க முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.



ரஷ்யாவின் கருங்கடல் முற்றுகை உலகம் முழுவதும் உள்ள சந்தைகளுக்கான உணவு விநியோ கத்தை முழுமையாக தடுத்தது. ரஷ்யா உக்ரைன் மீது படை யெடுப்பை அறிவித்ததைத் தொடர்ந்து உலக நாடுகளில் உணவுப் பொருட்களின் விலைகள் கணிசமாக உயர்ந்தமை குறிப்பிடத் தக்கது. (ஐ)



## இந்திய குடியரசு தலைவராக திரௌபதி முர்மு தெரிவானார்!

புதுடில்லி, ஜூலை 23

இந்திய குடியரசு தலைவர் தேர்தலில் பா. ஜ. க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளர் திரௌபதி முர்மு (64) அமோக வெற்றி பெற்றார்.

அவர் 64 சதவீத வாக்குகளைப் பெற்றார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட, எதிர்க்கட்சிகளின் வேட்பாளர் யஷ்வந்த் சின்ஹாவுக்கு 36 சதவீத வாக்குகள் கிடைத்தன.

தற்போதைய இந்திய குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்தின் பதவிக் காலம் நாளையுடன் நிறைவடைகிறது. இதையடுத்து, புதிய குடியரசு தலைவரை தேர்வு செய்வதற்கான தேர்தல் அறிவிக்கப்பட்டது.

பா. ஜ. க. கூட்டணி சார்பில் ஜார்க்கண்ட் முன்னாள் ஆளுநர் திரௌபதி முர்முவும், எதிர்க்கட்சிகள் சார்பில் முன்னாள் மத்திய அமைச்சர் யஷ்வந்த் சின்ஹாவும் வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டனர்.

பா. ஜ. க. கூட்டணி வேட்பாளர் முர்மு பழங்குடியினத்தைச் சேர்ந்தவர் என்பதால், அந்தக் கூட்டணியில் இடம்பெறாத பல்வேறு கட்சிகள் அவருக்கு ஆதரவு தெரிவித்தன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கடும் வெப்பத்தால் உருகுகின்றன புகையிரத சமிக்ஞை விளக்குகள்!

### இங்கிலாந்தில் ரயில் சேவைகள் ரத்து

லண்டன், ஜூலை 23

வரலாறு காணாத வெப்பத்தால் இங்கிலாந்து நாட்டில் பல கட்டமைப்புகள் உருகும் படங்கள் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தி யுள்ளன.

ஐரோப்பிய நாடுகளில் கடந்த சில நாட்களாக வெப்பத்தின் தாக் கம் அதிகரித்து வருகிறது. இங்கி லாந்து, பிரான்ஸ், ஸ்பெயின், போர்த்துக்கல் உள்பட பல நாடுக ளில் வெப்பத்தின் அளவு அதிகரித்துள்ளது.

அந்நாட்டிலுள்ள புகையிரதப் பாதையில் சமிக்ஞை விளக்கு கடும் வெப்பத்தால் உருகியது. இந்தப் படம் சமூக வலைதளத்தில் இந்த படம் பதிவிடப்பட்டுள்ளது. புகையிரத நிலையங்களின் மேல்நிலை கம்பிகள், தடங்கள் மற்றும் சிக்னல் அமைப்புகள் சேதமடைந்ததால், இங்கிலாந்து முழுவதும் பல இடைநிறுத்தப்பட்டுள்ளன. (ஐ)



## பிரேசிலில் படையினரால் 18 பேர் சுட்டுக்கொலை!

பிரேசிலியா, ஜூலை 23

பிரேசிலின் முக்கிய நகரமான ரியோடிஜெனிரோவின் வடக்கு பகுதியில் வாகனங்கள் பயணிக்கும்போது திருட்டில் ஈடுபடும் கும்பலை இராணுவத்தினர் சுற்றி வளைத்தனர்.

சுமார் 400இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் அங்கு சுற்றிவளைப்பில் ஈடுபட்டனர். இதன்போது இரு தரப்பினருக்கும் இடையே ஏற்பட்ட துப்பாக்கி சூட்டில், கும்பலை சேர்ந்த 18 பேர் இறந்தனர். மேலும் பலர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் பிரேசிலில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)



## பைடனுக்கு கொரோனா!

வாஷிங்டன், ஜூலை 23

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுக்கு கொரோனா தொற்று வியாழக்கிழமை உறுதி செய்யப்பட்டது.

79 வயதாகும் அவருக்கு அந்த நோய்த்தொற்றில் மிதமான அறிகுறிகள் மட்டுமே தென்படுகின்றன என்று வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் ஜீன்-பியர் தெரிவித்தார். தற்போது அவர் நோய் தீவிரமடைவதைத் தடுப்பதற்காக தீநுண்மி எதிர்ப்பு (அன்டி வைரஸ்) மருந்தான பாக்ஸ்லோவிடை உட்கொண்டு வருகிறார் என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி பொறுப்பை ஏற்பதற்கு முன்னரே இரு தடவைகள் கொரோனா தடுப்பூசிகளையும் செலுத்திக் கொண்ட பைடன், பின்னர் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் ஊக்கத் தடுப்பூசியும் கடந்த மார்ச் 30ஆம் திகதி மேலும் ஓர் ஊக்கத் தடுப்பூசியும் பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஸ்பெயினில் வெப்ப அலை; 1047 பேர் இதுவரை மரணம்!

மட்ரிட், ஜூலை 23

ஸ்பெயினில் கடந்த 10 நாட்களில் இல்லாதளவு வெப்பநிலை உயர்ந்துள்ளது. 40 பாகை செல்சியஸை தாண்டிய வெப்ப அலையால் இதுவரை அங்கு 1047 பேர் உயிரிழந்தனர் என்று அந்த நாட்டு அரசு அறிவித்துள்ளது.

இந்த வெப்பத்தால் பாதிக்கப்பட்டவர்களில் 672 பேர் 85 வயது அல்லது அதற்கு மேற்பட்டவர்கள், 241 பேர் 75 முதல் 84 வயதுக்கு உள்பட்டவர்கள், 88 பேர் 65 முதல் 74 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர்.

வெப்ப அலைக்கு சுவாசம் மற்றும் இதய நோய்கள் உள்ளவர்களே அதிகளவில் இறந்தனர். இளைஞர்களிடையே முழுமையாக எந்தவித பாதிப்பும் காணப்பட வில்லை.

ஸ்பெயினின் முதல் வெப்ப அலை ஜூன் 11 ஆம் நாள் தொடங்கி ஒரு வாரம் நீடித்தது. இதுவரை இல்லாத அதிகபட்ச அளவாக வெப்பநிலை 40 பாகை செல்சியஸ் தாண்டியதால் 829 பேர் வெப்பம் தொடர்பான காரணங்களால் இறந்தனர். (ஐ)



## தந்தையின் ஞாபக மறதி குழந்தை உயிரை பறித்தது!

பாரிஸ், ஜூலை 23

தொழிலுக்குச் செல்லும் அவசரத்தில் காரின் உள்ளே தந்தையாரால் மறந்து கைவிடப்பட்ட 14 மாத ஆண் குழந்தை உயிரிழந்துள்ளது. இச்சம்பவம் பிரான்ஸின் தென் மேற்கு மாவட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

தொழில் இடத்துக்குச் செல்லும் வழியில் காப்பகத்தில் சேர்ப்பதற்காகத் தனது குழந்தையைக் காரில் ஏற்றிச் சென்ற தந்தை பராமரிப்பகத்தில் குழந்தையை இறக்குவதற்கு மறந்து விட்டார். நேரே பணியிடம் சென்றுள்ளார்.

அன்றைய தினம் குழந்தை பராமரிப்பகத்தில் சேர்க்கப்படவில்லை என்ற தகவல் தாயாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்தே குழந்தையை மறந்து காரினுள் கைவிட்டமை தந்தைக்கு நினைவு வந்தது.

பெற்றோர்கள் பதறியடித்துக் கொண்டு கார்த் தரிப்பிடத்துக்கு ஓடிச் சென்றபோது குழந்தையின் சடலத்தையே மீட்க முடிந்தது. வாகனத் தரிப்பிடத்தில் மூடிய காருக்குள் மாலை ஐந்து மணிவரை பல மணிநேரம் அடைபட்டுக் கிடந்த குழந்தை கடும் வெப்பம் காரணமாக உயிரிழந்தது. மூச்சுத் திணறல், மற்றும் நீர் இழப்புக் காரணமாகவே மரணம் சம்பவித்துள்ளது என்று பிரேத மருத்துவப் பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொலிஸார் கொலைக் குற்றச்சாட்டின் பேரில் அந்தத் தந்தையைக் கைதுசெய்துள்ளனர். இந்தச் சம்பவத்தால் அவர்கள் வசிக்கின்ற கிராமம் பெரும் சோகத்தில் மூழ்கியுள்ளது.

குழந்தைகளும் வளர்ப்புப் பிராணிகளும் இது போன்று வாகனங்களுக்குள் மறந்து கைவிடப்படுகின்ற சம்பவங்கள் அடிக்கடி இடம்பெற்று வருகின்றன. (ஐ)



# ஆசிய கிண்ணத் தொடர் எமிரேட்ஸூக்கு மாற்றம்!

*மும்பை, ஜூலை 23*

இலங்கையில் நடக்கவிருந்த ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி ஐக்கிய அரபு எமிரேட்ஸூக்கு மாற்றப்பட்டுள்ளது.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் உட்பட 6 அணிகள் பங்கேற்கும் ஆசிய கிண்ணக் கிரிக்கெட் போட்டி அடுத்த மாதம் (ஓகஸ்ட்) 27ஆம் திகதி முதல் செப்ரெம்பர் 11ஆம் திகதி வரை இலங்கையில் நடத்த திட்டமிடப்பட்டது. ஆனால், இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடி மற்றும் மக்கள் போராட்டம் காரணமாக போட்டியை நடத்துவதில் சிக்கல் எழுந்தது.

இலங்கை கிரிக்கெட் சபையும் தாங்கள் இந்த போட்டியை நடத்த இயலாத சூழலில் இருப்பதாக ஆசிய கிரிக்கெட் குழுவிடம் தெரிவித்தது. இந்த நிலையில் ஆசிய கிண்ணத் தொடர் ஐக்கிய அரபு எமிரேட்ஸூக்கு மாற்றப்படுவதாக இந்திய கிரிக்கெட் சபையின் தலைவர் சௌரவ் கங்குலி அறிவித்துள்ளார்.



# மே. இ. தீவுடனான ஒருநாள் தொடர் விலகுகிறார் இந்தியாவின் ஜடேஜா

*புதுடில்லி, ஜூலை 23*

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஒருநாள் தொடரிலிருந்து விலகவுள்ளார் இந்திய அணியின் சகலதுறை வீரரான ஜடேஜா.

மேற்கிந்தியத்தீவுகள் - இந்திய அணிகளுக்கு இடையேயான முதல் ஒருநாள் போட்டி நேற்று நடந்தது. இந்தப் போட்டியில் முக்கிய வீரர்களுக்கு ஓய்வு அளிக்கப்பட்டது.

இதனால் அணித் தலைவராக ஷிகர் தவான், உப தலைவராக ஜடேஜா நியமிக்கப்பட்டனர்.

இந்நிலையில், காயம் காரணமாக ஜடேஜா போட்டியிலிருந்து நேற்று விலகினார். இடது முழங்காலில் காயம் ஏற்பட்டுள்ளது. ஜடேஜா முதல் ஒருநாள் போட்டி மட்டுமின்றி ஒருநாள் தொடரில் இருந்து விலகவுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

ஜடேஜா மருத்துவர்களின் கண்காணிப்பில் உள்ளார். அவரின் காயம் எவ்வளவு தீவிரமானது என்பதை மருத்துவர்கள் முடிவு செய்வார்கள். ஒருநாள் தொடருக்குப் பிறகு ஜூலை 29ஆம் திகதி தொடங்கும் இருபது - 20 தொடரில் ஜடேஜா விளையாடலாம். இருப்பினும் மருத்துவக் குழு ஜடேஜா குறித்த அறிக் கையை அளிக்கும் போது மட்டுமே அது குறித்து கூற முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# நடால், ஜொகோவிச், பெடரர், முர்ரே ஒரே அணியில் விளையாடும் தொடர்!

*லண்டன், ஜூலை 23*

லேவர் கிண்ணத்துக்காக ஐரோப்பா அணியில் விளையாடுவதற்காக ரபேல் நடால், ரோஜர் பெடரர், அன்டி முர்ரே, நோவக் ஜொகோவிச்சுடன் இணையவுள்ளார்.

உலக அணியில் 6 வீரர்களும் ஐரோப்பா அணியில் 6 வீரர்களும் மோதும் தொடர் எதிர்வரும் செப்ரெம்பர் 23 - 25ஆம் திகதி வரை லண்டனில் நடக்கவுள்ளது.

பெலிக்ஸ் அகர் - அலியாசிம் ரெய்லர் பிரிட்ஸ், டியாகோ ஸ்ஹ் வார்ட்ஸ்மன் ஆகியோர் இதுவரை உலக அணியில் இணைந்துள்ளனர்.

இந்நிலையில், ஐரோப்பா அணியில் விளையாடும் நடால் 22, ஜொகோவிச் 21, பெடரர் 20 முர்ரே 3 தடவைகள் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தைக் கைப்பற்றியுள்ளனர். (ஐ)



# 2ஆவது டெஸ்ட் போட்டி; தீக்ஷன, அப்ரிடி விலகல்!

*கொழும்பு, ஜூலை 23*

பாகிஸ்தான் - இலங்கை அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணியின் மஹீஸ் தீக்ஷன, அப்ரிடி ஆகியோர் விலகியுள்ளனர்.

இலங்கை வந்துள்ள பாகிஸ்தான் அணி 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாடுகிறது. முதல் போட்டியை பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றிருந்தது. இந்நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி வருகிற நாளை ஞாயிற்றுக்கிழமை நடை பெறுகிறது.

இதில், இலங்கை அணியின் மஹீஷ் தீக்ஷனவும் காயம் காரணமாக இந்தப் போட்டியில் பங்கேற்க மாட்டார் என்பதை இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்தது.

இந்நிலையில், பாகிஸ்தான் அணியின் இளம் வேகப்பந்து வீச்சாளர் அப்ரிடி காயம் காரணமாக விலகியுள்ளார். அவருக்கு பதிலாக ஹரிஸ் ரவூப் களமிறங்குகிறார். இது அவருக்கு முதல் டெஸ்ட் போட்டி என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)





# ஆறு ஆண்டுகளுக்குப் பின்னர் சிம்பாவே செல்கிறது இந்தியஅணி!

*புதுடில்லி, ஜூலை 23*

இந்திய கிரிக்கெட் அணி தற்போது மேற்கிந்தியத் தீவுகளில் உள்ளது. அந்த அணியுடன் 3 ஒருநாள் போட்டி மற்றும் மூன்று இருபது - 20 போட்டிகளில் விளையாடுகிறது.

ஓகஸ்ட் 7ஆம் திகதி முடிவடைகிறது. இந்த நிலையில் இந்திய அணி 6 ஆண்டுகளுக்கு பிறகு ஓகஸ்ட் சிம்பாவே செல்கிறது. அந்த அணியுடன் 3 ஒரு நாள் போட்டிகளில் விளையாடுகிறது. ஓகஸ்ட் 18, 20 மற்றும் 22ஆம் திகதிகளில் ஒருநாள் போட்டிகள் ஹராரேயில் நடக்கிறது.

சிம்பாவே தொடருக்கு லோகேஷ் ராகுல் அணித் தலைவராக நியமிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இருபது - 20 உலகக் கிண்ணத் தொடர் ஒக்ரோபர் மாதம் அவுஸ்ரேலியாவில் நடக்கிறது. இதற்காக இந்திய அணி முழு வீச்சில் தயார் செய்ய இந்த சுற்றுப்பயணங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தொடருக்கும் ஒவ்வொரு அணித் தலைவர் நியமிக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



## கலந்துரையாடல்!

யாழ்ப்பாணம், ஜூலை 23

நூலக நிறுவனத்தால் நிகழ்த்தப்படும் இணையவழி நிகழ்ச்சித் தொடர் வரிசையில் 47 ஆவது நிகழ்வாக "நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளையின் நியாய இலக்கணம்: தமிழர் மெய்யியலின் செல்நெறியில் ஈழத்தவரின் வகிபாகம்" எனும் தலைப்பிலான கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும்.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இந்து மெய்யியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் தி. செல்வமனோகரன் வளவாளராகக் கலந்துகொள்வார். ஒருங்கிணைப்பாளராக மயூரநாதன் இரத்தினவேலுப்பிள்ளை செயல்படுவார். இதில் ஆர்வமுள்ள அனைவரும் சூம் செயலியில் 81415584070 என்ற அடையாள எண்ணைப் பயன்படுத்தி இணைந்து கொள்ள முடியும். (ஐ)

## மரண அறிவித்தல்

மலர்வு
15 - 08 - 1929



உதிர்வு
20 - 07 - 2022

### சதாசிவம் சுந்தரம்பிள்ளை

யாழ். மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், அல்லைப்பிட்டியை வசிப்பிடமாகவும், ஜேர்மனி Bad Wildungen ஐ தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சதாசிவம் சுந்தரம்பிள்ளை அவர்கள் 20.07.2022 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற சதாசிவம், அன்னக்கிளி தம்பதிகளின் பாசமிகு மூத்த மகனும், காலஞ்சென்ற கந்தையா, செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும்,புவனேஸ்வரி(ஜேர்மனி) அவர்களின் அன்புக் கணவரும்,மகேந்திரன்(ஜேர்மனி), இராஜேந்திரன்(சுவிஸ்), இராஜேஸ்வரி(அல்லைப்பிட்டி), காலஞ்சென்ற தெய்வேந்திரன் மற்றும் தியாகேஸ்வரி(சாவகச்சேரி), பரமேஸ்வரி(சாந்தி- நெதர்லாந்து), சுவேந்திரன்(சுவிஸ்), தனேந்திரன்(ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும்,சிவகௌரி(ஜேர்மனி), கணேசரூபி(சுவிஸ்), சிவபாதம் (அல்லைப்பிட்டி), சிவகுமார்(சாவகச்சேரி), சிவா(நெதர்லாந்து), மஞ்சுளா(சுவிஸ்), உமாநந்தினி(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான நேசரத்தினம், மகேஸ்வரி மற்றும் தெட்சணாமூர்த்தி(இலங்கை), காலஞ்சென்ற தில்லைநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரரும்,காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், பாலச்சந்திரன் மற்றும் குணமணி(இலங்கை), காலஞ்சென்ற வாசுதேவன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம், காந்தலிங்கம், பாக்கி யம், குலசிங்கம் (மாம்பழம்) மற்றும் செல்வராணி(கனடா) ஆகியோ ரின் அன்பு மைத்துனரும்,நிவேதா, மிதுலா, றுமேஸ், மிலானி, டெனோஷன், அஜந், கௌசிகா, விஸ்ணுதரன், யுகப்பிரியா, லாவண்யா, விவேக், பிரதினா, புவி, தனுஷன், வேணு, பிரசாந், பிரதீப், தனுஷா, காண்டீபன், சிந்து, சிந்துஜன், அனோஜன், அபிலாஸ், அட்சயன், அபினாஸ், அபினா, அவனேஸ் ஆகியோரின் பாச மிகு பேரனும்,நைலா, நிரு ஜன், நிஷானி, மோஜிகா, மாதுலா, ஆரி யன், வர்ஷினி, அன்சிகா, ஆதீஸ் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

பார்வைக்கு
Tuesday, 26 Jul 2022 11:00 AM - 1:00 PM
Hauptfriedhof Neue Friedhofstraße 1, 34537 Bad Wildungen, Germany

கிரியை
Tuesday, 26 Jul 2022 1:00 PM - 2:00 PM
Hauptfriedhof Neue Friedhofstraße 1, 34537 Bad Wildungen, Germany

தகனம்
Tuesday, 26 Jul 2022 2:00 PM
Hauptfriedhof Neue Friedhofstraße 1, 34537 Bad Wildungen, Germany

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**மகேந்திரன் (சுட்டா) - மகன் .**

தொடர்புகளுக்கு
**மகேந்திரன் (சுட்டா) - மகன்** Mobile : +4915221973177
**இராஜேந்திரன் (ராசன்) - மகன்** Mobile : +41765624884
**இராஜேஸ்வரி - மகள்** Mobile : +94771122914
**தியாகேஸ்வரி - மகள்** Mobile : +94718770907
**சாந்தி - மகள்** Mobile : +31687399667
**சுவேந்திரன்(சுதன்) - மகன்** Mobile : +41763289657
**தனேந்திரன்(தனம்) - மகன்** Mobile : +491727022517

# தேர்தலொன்றுக்கு செல்லும்வரை அமைதி போராட்டங்கள் தொடரும்

### ஜே.வி.பியின் ரில்வின் சில்வா கூறுகிறார்

**கொழும்பு, ஜூலை 23**

**ராஜபக்ஷக்களின் வேலைத்திட்டத்தைக் கையில் எடுத்தே போராட்டக்காரர்களை, இராணுவப் பலம் கொண்டு புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடக்க முற்படுகிறார் என ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.**

*மேலும், மக்களால் நிராகரிக்கப்பட்ட பாராளுமன்றத்தை உடனடியாக கலைத்து பொதுத் தேர்தலொன்றுக்கு செல்லும்வரை மக்கள் போராட்டம் தொடரும் என்றும் அவர் குறிப்பிட்டார்.*

*கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.*

*அவர் மேலும் தெரிவிக்கையில்-*

*புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதியாக பதவியேற்ற நேரத்திலிருந்தே போராட்டக்காரர்களை கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வந்தார்.*

*அதன் ஓர் அங்கமாகவே, இன்று(நேற்று) காலி முகத்திடல் போராட்டக்காரர்கள், அங்கு செய்தி சேகரிக்கச் சென்ற தேசிய மற்றும் சர்வதேச ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.*

*அங்குள்ள நிர்மாணங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டுள்ளன. இதுவரை 10 பெயரளவில் கைது செய்யப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. பலர் காயமடைந்துள்ளனர்.*

*அச்சுறுத்தல்களை மேற்கொண்டு மக்களை கட்டுப்படுத்தவே ரணில் விக்கிரமசிங்கவும், ராஜபக்ஷவினரும் தற்போது முற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.*

*ஆனால், அடக்குமுறைகளால் மக்களைக் கட்டுப்படுத்த முடியாது என்பதை அவர்கள் புரிந்துக் கொள்ள வேண்டும்.*

*ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ராஜபக்ஷக்களின் ஆதரவுடன் தான் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.*

*எனவே, மக்களுக்கு அன்றி ராஜபக்ஷவினருக்கு விசுவாசமாக செயற்பட வேண்டும் என்றே அவர் நினைப்பார்.*

*ராஜபக்ஷவினரின் வேலைத்திட்டத்தையே அவர் இன்று கையில் எடுத்துள்ளார். அதன் ஓர் அங்கமாகவே இந்த தாக்குதல் சம்பவமும் இடம்பெற்றுள்ளது.*

*இது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முதலும் கடைசியுமான அடக்குமுறையாக இருக்கும் என நாம் நம்புகிறோம்.*

*இவருக்கு மக்கள் ஆணை கிடையாது. மக்கள் ஆணையின்றி ஜனாதிபதியான இவரை மக்களும் ஜனாதிபதியாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற அவசியம் கிடையாது.*

*மக்கள் எதிர்ப்பை இவர் இன்னமும் புரிந்துக் கொள்ளவில்லை. 5 வருடங்களுக்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதியை 2 வருடங்களிலேயே மக்கள் விரட்டியடித்துள்ளார்கள். இந்த நிலைமை எல்லாம் புதிய ஜனாதிபதிக்கு புரியவில்லை என்றே தெரிகிறது.*

*இராணுவம் கொண்டு மக்களை அடக்கிவிட முடியாது. அவ்வாறான அடக்குமுறைகளுக்கு நாம் என்றும் இடமளிக்கவும் போவதில்லை.*

*இந்தப் போராட்டங்கள் எதிர்க்காலத்திலும் தொடரும். மக்களின் உண்மையான எதிரியார் என்பதை முதலில் புரிந்துக் கொள்ளவேண்டும்.*

*ஜனாதிபதி மட்டுமன்றி, ஒட்டுமொத்த பாராளுமன்றமும் மக்களால் நிராகரிக்கப்பட்டதாகும். எனவே, உடனடியாக பாராளுமன்றத்தை கலைத்து, மீண்டும் பொதுத் தேர்தலொன்றுக்கு செல்லவேண்டும்.*

*அவ்வாறு இடம்பெற்றால் மட்டுமே நாட்டை மீட்டெடுக்க முடியும். அதுவரை இந்தப் போராட்டமும் தொடரும்- என்றார்.*

*(அ)*

## மரண அறிவித்தல்

மலர்வு
25 - 10 - 1953



உதிர்வு
21 - 07 - 2022

### திருமதி பாலகிருஸ்ணன் பரஞ்சோதி

யாழ். அல்வாய் கிழக்கு பெரியார்பகுதியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு கொட்டாஞ்சேனையை வசிப்பிடமாகவும் கொண்ட பாலகிருஸ்ணன் பரஞ்சோதி அவர்கள் 21.07.2022 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான தியாகராஜா சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நடராசா மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பாலகிருஸ்ணன் அவர்களின் அன்பு மனைவியும்,சதீஸ்குமார், சாந்தகுமார், சத்தியா, சந்திரகுமார் ஆகியோரின் பாசமிகு தாயாரும், வடிவாம்பிகை, கம்சா, சதாசீலன், ஜசிந்தா ஆகியோரின் அன்பு மாமியாரும்,காலஞ்சென்ற பார்வதி மற்றும் இராமச்சந்திரன், கோபாலசண்முகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும்,டிலக்சன் (Dilukshan), துசன், கோபிசா, ஷப்னா, கர்சனா, வர்சயா, கோபினா, ருத்வின் ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 25.07.2022 திங்கட்கிழமை அன்று பொரளையில் அமைந்துள்ள ஜெயரட்ண மலர்சாலையில் மு.ப 09:00 மணி முதல் பி.ப 04:00 மணிவரை பார்வைக்காக வைக்கப்பட்டு 26.07.2022 செவ்வாய்க்கிழமை அன்று அவரது பிறந்த ஊரான அல்வாயில் இறுதிக்கிரியை நடைபெற்று பின்னர் பி.ப 01:00 மணியளவில் சுப்பர்மட மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**சதீஸ்குமார் - மகன்.**

தொடர்புகளுக்கு:
**சதீஸ்குமார் - மகன்** Mobile : +447743258049
**சாந்தகுமார் - மகன்** Mobile : +94777686759
**சத்தியா - மகள்** Mobile : +16472855973
**சந்திரகுமார் - மகன்** Mobile : +447821178222
**கோபாலசண்முகம் - சகோதரன்** Mobile : +94771229976
**இராமச்சந்திரன் - சகோதரன்** Mobile : +94779145916

## போர் களமானது...

காலிமுகத்திடலில் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டக்காரர்களின் போராட்டம் நேற்று 104ஆவது நாளை எட்டியிருந்தது. இந்நிலையில், ஜனாதிபதி செயலகம் அமைந்துள்ள பகுதியிலிருந்து போராட்டக்காரர்கள் இன்றைய தினம் விலகவுள்ளனர் என்று முன்னர் அறிவிக்கப்பட்டது. இந்தநிலையில் நேற்று பின்னிரவு 1.30 மணியளவில் அந்தப் பகுதியை ஆயிரத்துக்கும் மேற்பட்ட எண்ணிக்கையிலான இராணுவம், விமானப்படை, விசேட அதிரடிப்படை, பொலிஸ் படைகள் சுற்றிவளைத்தன.

சுற்றிவளைத்தவர்கள், அங்கிருந்தவர்களை வெளியேறுமாறு கூறினர். இதைத் தொடர்ந்து அவர்களிடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து போராட்டக்காரர்களை படையினர் குண்டாந்தடிகளால் விரட்டி விரட்டி கடுமையாக தாக்கினர். இதில் பலர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவங்களை போராட்டக்காரர்கள் சமூகவலைத்தளங்களில் நேரடியாக பதிவிட்டதுடன், தமக்கு நடப்பவற்றை ஊடகங்களுக்கும் தெரிவித்தனர். இதேசமயம் அங்கு நின்ற ஊடகவியலாளர்களையும் இராணுவத்தினர் தாக்கினர். இதன்போது, பி. பி. சி.யின் இலங்கை செய்தியாளரும் தாக்கப்பட்டார் என்று அந்த ஊடகம் தகவல் வெளியிட்டது.

காயமடைந்தவர்களை ஏற்றுவதற்காக அந்தப் பகுதிக்கு விரைந்த அம்புலன்ஸ் வாகனங்களையும் உதவிக்கு சென்றவர்களையும் உள்ளே நுழைய முடியாதவாறு படையினர் தடுத்து நிறுத்தியிருந்தனர்.

எனினும், போராட்டக்காரர்கள் மீதான தாக்குதல்கள் வெளிநாட்டு தூதரகங்கள் மற்றும் சர்வதேச ஊடகங்களின் கவனத்தை ஈர்த்த பின்னரே காயமடைந்தவர்கள் மருத்துவமனைகளுக்கு அனுப்பப்பட்டனர். இந்தத் தாக்குதல்களில் 50இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். 16 பேர் படுகாயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். 9 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் நேற்று மாலை பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில் இருவர் இன்னமும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

போராட்டக்காரர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பகுதி பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டு படைத்தரப்பின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. அவசரகால சட்டத்தின் கீழ் அதிகாரத்தைப் பயன்படுத்தி ஜனாதிபதி செயலகப் பகுதியிலிருந்து போராட்டக்காரர்களை அகற்றியதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், 100 நாட்களுக்கும் மேலாக இயங்காமல் இருந்த ஜனாதிபதி செயலகத்தை மீளவும் தறிக்கும் நோக்கிலேயே இந்த செயல்பாடு முன்னெடுக்கப்பட்டதாக பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

போராட்டக்காரர்கள் மீதான தாக்குதல்களுக்கு வெளிநாட்டு தூதுவர்கள், மனித உரிமைகள் அமைப்புகள், சர்வதேச அமைப்புகள், அரசியல் கட்சிகள் எனப் பலவும் கண்டனம் தெரிவித்துள்ளன.

ஐ. நா. சபையின் வதிவிட பிரதிநிதி ஹனா சிங்கர், " போராட்டக்காரர்களை கலைக்க பலாத்காரத்தை பயன்படுத்துவது கவலையளிக்கிறது. ஊடகவியலாளருக்கும், மனித உரிமைகள் பாதுகாவலர்களுக்கும் போராட்டத்தை கண்காணிக்க உரிமை உண்டு. அவர்களின் செயல்பாடுகளுக்கு இடையூறு செய்யக்கூடாது. அமைதியாக ஒன்றுகூடும் உரிமை இலங்கையர்களுக்கு உண்டு", என்று கூறியுள்ளார்.

இதேவேளை, அமெரிக்க தூதுவர் ஜூலி சங், "நள்ளிரவில் காலிமுகத்திடலில் போராட்டக்காரர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஆழ்ந்த கவலையடைகிறோம். அதிகாரிகள் கட்டுப்பாட்டுடன்இருக்கவும் காயமடைந்தவர்களுக்கு மருத்துவ உதவியை வழங்கவும் வலியுறுத்துகிறோம்", என்றார்.

ராஜபக்ஷ நிழல்களின் அரசாங்கம் என்று விமர்சித்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித், அமைத்தியான போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்துவதில் அரசாங்கம் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளது என்றும் கூறினார்.

போராட்டக்காரர்கள் மீதான தாக்குதலைத் தொடர்ந்து தலைநகரில் நேற்று பதற்றம் நிலவியது. கோட்டை புகையிரத நிலையம், தாமரை கோபுர பகுதிகளிலும் காலிமுகத்திடல் பகுதியிலும் எதிர்ப்பு போராட்டங்கள் நேற்றுக்காலை முதல் ஆரம்பமாகின. இதேசமயம், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கண்டன போராட்டங்கள் தொடங்கியுள்ளமையும் - அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இராணுவம்...

இணைந்து போராட்டக்கார்களை தாக்கி அவர்களை அங்கிருந்து வலுக்கட்டாயமாக அகற்றியிருந்தனர். விடிகாலை நேரத்தில் முன்னெடுக்கப்பட்ட இந்த நடவடிக்கையைத் தொடர்ந்து இராணுவத்தின் செயல்கள் தற்போது தென்னிலங்கையில் பெரும் அதிர்வலைகளை உருவாக்கியுள்ளன.

ஜனாதிபதி செயலக பகுதியிலிருந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் வலுக்கட்டாயமாக அகற்றப்பட்ட பின்னர் தாமரை தடாக வீதியில் போரட்டம் இடம்பெற்றது. இதன்போது போராட்டத்தைக் கட்டுப்படுத்த பெருமளவு இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்தனர்.

அச்சமயம் போராட்டத்தில் ஈடுபட்ட சிங்களப் பெண்மணி ஒருவர், "இராணுவம் போர்க்குற்றம் இழைத்தது என்பதை இப்போது ஏற்றுக்கொள்ள வேண்டும்", என்று பெரும் சத்தமாகக் கூறினார்.

இதேபோன்று, இசுரு பிரியரங்க என்ற சமூக செயல்பாட்டாளர் தனது பதிவில், "அன்பான தமிழ் நண்பர்களே, இலங்கை இராணுவம் மற்றும் படைகள் செய்த அனைத்து போர் குற்றங்களுக்காகவும் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன். இது நாள்வரை எனக்கு எதுவும் தெரியாது! அனைத்து ஊடகப் பரப்புகளையும் கொண்டிக்கும்போது கொழும்பில் அவர்கள் எங்களிடம் இதைச் செய்தார்கள் என்றால் அவர்கள் உண்மையில் வடக்கில் எப்படி நடந்து கொண்டார்கள் என்பதை நினைத்துக்கூட பார்க்கமுடியாது", என்று பதிவிட்டுள்ளார்.

இதுபோன்று பல்வேறு விதமான கருத்துக்களை பிரதிபலிக்கும் பதிவுகள் தென்னிலங்கை சமூக ஊடகங்களில் பரவலாக வருகின்றன. இவைபெரும் சிந்தனைகளையும் அதிர்வலைகளையும் ஏற்படுத்தியுள்ளன. (ஐ)

## ரூ. 1009 கோடி...

அறிய வருகின்றது.

தகவல் அறியும் உரிமை சட்டம் மூலமாக ஒரு பகுதி மாத்திரமே வெளியான இந்தத் தகவலின்படி,

ருகுணு பல்கலைக்கழக மாணவர் சுசந்த அநுர பண்டார மரணம் தொடர்பான விசாரணை ஆணைக்குழு, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழு, மாத்தளை பொது மருத்துவமனையில் மனித எலும்புக்கூடுகள் கண்டறியப்பட்டது தொடர்பான ஆணைக்குழு, 1.1.1983 முதலான வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான முறைப்பாடுகள் தொடர்பில் விசாரிக்கும் ஆணைக்குழு,

கடுமையான மோசடி, ஊழல், பொது வளங்கள், சலுகைகள்,இவற்றில் அதிகார துஷ்பிரயோகம் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் குறித்து விசாரிக்கும் ஆணைக்குழுவும் 19 கோடி ரூபாய்களுக்கு மேல் செலவிட்டுள்ளன.

இந்த விசாரணைக்குழுக்களுக்காக ஆயிரம் கோடி ரூபாய்க்கும் மேல் செலவிட்ட போதிலும் வழங்கப்பட்ட பரிந்துரைகள் எந்தளவுக்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன? பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைத்ததா? என்பன வெறும் கேள்வியாகவே உள்ளன. (ஐ)

## எரிபொருளுக்கு...

பட்டுள்ள வெள்ளை, நீலம், இளஞ்சிவப்பு நிற அட்டைகளை பரிசீலிப்பதுடன் தேசிய திட்டத்தின் பிரகாரம் வாகனத்தின் இறுதி இலக்கத்தை பரிசீலித்து சுகாதாரத் துறையினர் உட்பட அனைவருக்கும் ஒரே வரிசையில் எரிபொருள் வழங்கப்படவேண்டும்.

மேலும் எரிபொருள் அட்டை விநியோகம் தொடர்பாக ஒன்றுக்கு மேற்பட்ட வாகனங்கள் இருப்பின் அதனை உறுதிப்படுத்தி ஒரு வாகனத்திற்கு ஒரு அட்டையினை வழங்குமாறு பிரதேச செயலாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஓகஸ்ட் மாதம் வரை கியூ. ஆர். குறியீட்டுடன் இணைந்த வகையில் எரிபொருள் அட்டையிலும் விநியோகப் பதிவு மேற்கொள்ளப்படுமென தீர்மானிக்கப்பட்டது.

திணைக்கள வாகனங்கள், அம்புலன்ஸ் என்பவற்றுக்கு அவற்றுக்கான எரிபொருட் கட்டளை மூலம் எரிபொருள் பெறும் இடத்தில் எரிபொருள் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது. அரச, தனியார் அம்புலனஸ்களுக்கு இலங்கை போக்குவரத்துச்சபையினூடாகவும் எரிபொருள் விநியோகிக்க முடியும்.

ஒப்பந்தக்காரர்கள் ஒப்பந்த வேலைகள் நடைபெறும் இடத்தின் பிரதேச செயலாளரிடம் அல்லது அயல் பிரதேச

## ஊழல்...

விக்கிரமசிங்க இலங்கையின் பிரதமராக 6 முறை பதவி வகித்து, ஊழல்வாதியா ராஜபக்ஷவை பாதுகாத்துள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சொத்துக்களை கணக்காய்வு செய்ய வேண்டிய தருணம் இது" - என்று அதில் பதிவிட்டுள்ளார். (ஐ)

## காலிமுகத்திடல்...

பாதுகாவலர்களுக்கு ஆர்ப்பாட்டங்களைக் கண்காணிக்க உரிமை உண்டு என்றும், அவர்களின் செயல்பாடுகளுக்கு இடையூறு ஏற்படக் கூடாது என்றும் அவர் மேலும் கூறினார்.

எதிர்ப்புகளையும் அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான உரிமையையும் நசுக்கும் நடவடிக்கைகள் இலங்கையில் பொருளாதார மற்றும் அரசியல் ஸ்திரமின்மையை மோசமாக்கும் என்று ஹனா சிங்கர் எச்சரித்துள்ளார். (அ)

## அம்புலன்ஸ்...

படையினரால் விரட்டியடிக்கப்பட்டது. இதன்போது பலர் கைது செய்யப்பட்டனர். போராட்டக்காரர்களின் கூடாரங்கள் அடித்து நொருக்கப்பட்டன. பலர் காயமடைந்தனர்.

இதில் காயமடைந்த போராட்டக்காரர்கள் மற்றும் ஊடகவியலாளர்களை மருத்துவமனைக்கு கொண்டு செல்வதற்காக விரைந்த அம்புலன்ஸ் வாகனங்களை படைத்தரப்பினர் வீதிகளில் தடுத்து நிறுத்தியுள்ளனர்

இதனால், போராட்டத்தில் ஈடுபட்ட போராட்டக்காரர்கள் படையினரால் தாம் முற்றுகையிடப்பட்ட காட்சியை சமூக வலைத்தளங்கள் ஊடாக அனைத்துலக நாட்டு தூதரகங்களுக்கு அனுப்பி, காயப்பட்ட போராட்டக்காரர்களை மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்வதற்கு அம்புலன்ஸ் வாகனங்களை அனுப்பி வைக்குமாறு வேண்டுகோள் விடுத்தனர்.

இதையடுத்து, அனைத்துலக நாட்டு தூதரக அதிகாரிகள் படைத்தரப்பின் உயர் அகாரிகளை தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு காயமடைந்தோரை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதற்கு அம்புலன்ஸ் வாகனங்களை சம்பவ இடத்துக்கு செல்ல அனுமதிக்குமாறு கோரிக்கை விடுத்தனர்.

தொடர்ச்சியான பல அழைப்புகளின் பின்னர் படைத் தரப்பினர் அனுமதி வழங்கியதையடுத்து காயமடைந்தவர்களை ஏற்றிச் செல்வதற்காக அம்புலன்ஸ்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. (ஐ- சி)

செயலகத்தில் முன்கூட்டியே அனுமதியை பெற்று எரிபொருளினை இறுதி இலக்கத்தின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளலாம்.

வெளிநாட்டுக்கு செல்வதற்காக டீசல் பெறவுள்ளவர்கள் ஒரு வாரத்திற்கு முன்னரே கிராம உத்தியோகத்தர் ஊடாக பிரதேச செயலாளரிடம் அனுமதியை பெற்று அவ்வாகனத்திற்குரிய இறுதி இலக்க தினத்தன்று எரிபொருளை பெற்றுக்கொள்ளலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது.

வெளிமாவட்டத்தை சொந்த முகவரியாக கொண்டு யாழ்ப்பாண மாவட்டத்தில் தனியார் துறைகளில் கடமையாற்றுபவர்கள் பெயர், விபரங்களை திணைக்களத்தினூடாக சமர்ப்பித்து உரிய பிரதேச செயலாளரிடம் அட்டையினை பெற்றுக் கொள்ள முடியும். (ஐ-3)

## தினேஷ்...

ரணில் விக்கிரமசிங்கவின் பாடசாலை நண்பராகவும் இவர் திகழ்ந்தார். உயர் நிலைக் கல்வியை ஓரிகன் பல்கலைக்கழகத்தில் பயின்ற இவர், சர்வதேச வணிகத்தில் பி. பி. ஏ. பட்டம் பெற்றார்.

1973ஆம் ஆண்டு மாகஜன எக்சத் பெரமுன கட்சியின் மத்திய குழு உறுப்பினரான இவர், 1974இல் பொதுச்செயலாளராக உயர்ந்தார். 1977 பாராளுமன்ற தேர்தலில் தோல்வயிடைந்தார். 1983இல் மஹரகம தேர்தல் தொகுதியில் போட்டியிட்டு வென்று மகாஜன எக்சத் பெரமுனவின் சார்பில் பாராளுமன்றுக்கு நுழைந்தார்.

1989, 1994 தேர்தல்களில் மீண்டும் தோல்வியைடந்தார். 2000ஆம் ஆண்டு மக்கள் கூட்டணியுடன் இணைந்தது மகாஜன எக்சத் பெரமுன. அந்த ஆண்டு நடந்த தேர்தலில் வென்று மீண்டும் பாராளுமன்றம் சென்ற, முதன்முறையாக அமைச்சராகவும் ஆனார். அவருக்கு போக்குவரத்து, சுற்றுச்சூழல் அமைச்சுக்கள் வழங்கப்பட்டன.

2004இல் நகர அபிவிருத்தி மற்றும் நீர் வழங்கல் அமைச்சரானார். 2010இல் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சரானார். 2015 மகிந்த ராஜபக்ஷவின் பக்கம் எதிர்க்கட்சியில் இருந்தமையால் அமைச்சு பதவி எதையும் வகிக்கவில்லை. 2020ஆம் ஆண்டு வெளியுறவு, கல்வி, பொதுநிர்வாக அமைச்சராக பதவிகளை வகித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## புதிய...

புதிதாகப் பதவியேற்ற அமைச்சரவையிலேயே 18 பேர் கொண்ட இடைக்கால அமைச்சரவை பதவியேற்றது. இதில், முன்னைய அமைச்சர்களில் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ், நிமால் சிறீபால டீ சில்வா ஆகியோர் இடம்பெறவில்லை.

புதிய அமைச்சரவையின் விவரம் வருமாறு,

தினேஷ் குணவர்த்தன - பிரதமர் மற்றும் பொது நிர்வாகம், மாகாண சபை, உள்ளூராட்சி அமைச்சு, டக்ளஸ் தேவானந்தா - கடற்றொழில், சுசில் பிரேமஜயந்த - கல்வி, பந்துல குணவர்த்தன - போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள், கெஹலிய ரம்புக்வெல - சுகாதாரம் மற்றும் நீர் முகாமைத்துவம், மகிந்த அமரவீர - விவசாயம் மற்றும் வனவளங்கள், விஜயதாஸ ராஜபக்ஷ - நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசமைப்பு சீர்திருத்தம், ஹரீன் பெர்னாண்டோ - சுற்றுலா மற்றும் காணி, ரமேஷ் பத்திரண - பெருந்தோட்டங்கள், பிரசன்ன ரணதுங்க - நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு, அலி சப்ரி - வெளிநாட்டு விவகாரம், விதுர விக்கிரமநாயக்க - புத்தசாசனம் மற்றும் மத விவகாரம், காஞ்சன விஜயசேகர - எரிசக்தி மற்றும் மின்சாரம், நசீர் அஹமட் - சுற்றுச்சூழல், றொசான் ரணசிங்க - விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், நீர்ப்பாசனம், மனுஷ நாணயக்கார - தொழில் மற்றும் வெளிநாட்டு தொழில்வாய்ப்பு, டிரான் அலஸ் - பொதுப் பாதுகாப்பு, நளின் பெர்னாண்டோ - வர்த்தகம் மற்றும் உணவு பாதுகாப்பு. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# அரசியல் பேதம் கடந்து செயற்படுவதற்கு தயார்

## புதிய பிரதமர் தினேஸ் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 23

**நாட்டின் பிரச்னைகளை தீர்க்க அரசியல் பேதங்களைக் கடந்து செயற்படத் தயார் என புதிய பிரதமராக பதவியேற்றுள்ள தினேஸ் குணவர்த்தன தெரிவித்தார்.பிரதமராக பதவியேற்றத்தைத் தொடர்ந்து, ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாம் இன்று எதிர்நோக்கும் பிரச்னைகள் என்பது, இதற்கு முன்னர் நாம் சந்தித்திராத ஒன்றாகும்.

அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக நாம் பல பிரச்னைகளுக்கு முகம் கொடுத்து வருகிறோம்.

இன்று நாம் அமைச்சரவையை நியமித்த பின்னர், நாம் சர்வதேச நாடுகள் மற்றும் அமைப்புக்களுடன் கலந்தாலோசிக்கவுள்ளோம்.

எமது பயணத்தை மீண்டும் சக்திமிக்கதாக மாற்ற நாம் நடவடிக்கை எடுப்போம். மக்களின் கோரிக்கைள் அனைத்தையும்



கருத்திற்கொண்டே நாம் இந்த செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டின் அரசமைப்பை விரைவில் மாற்றவுள்ளாக அறிவித்துள்ளார். இவை அத்தியாவசியமாகும்.

நாட்டில் எரிவாயு மற்றும் உரப் பிரச்னை இருந்தது. இவற்றை நாம் நிவர்த்தி செய்துள்ளோம்.

அதேபோன்று, எரிபொருள் பிரச்னை உள்ளது. இதனையும் விரைவில் நிவர்த்தி செய்வோம்.

எமக்கிடையில் அரசியல் வேறுபாடுகள் இருந்தாலும், நாட்டின் எதிர்க்காலத்தை கருத்தில் கொண்டு, அரசியல் பேதமின்றி செயற்பட தயாராகவே உள்ளோம்- என்றார். (அ)

# தாக்குதலை கண்டிக்கும் அமெ., கனடா, பிரிட்டன்!

கொழும்பு, ஜூலை 23

கொழும்பு - காலிமுகத்திடலில் அரசுக்கு எதிராக அமைதி வழியில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது இன்று அதிகாலை படைத்தரப்பை ஏவி தாக்குதல் நடத்தப்பட்டு, போராட்டக்காரர்களுக்கு எதிராக வன்முறையை கட்டவிழ்த்து விட்டமை குறித்து சர்வதேச நாடுகள் கரிசனை வெளிப்படுத்தியுள்ளன.

கொழும்பு காலிமுகத்திடல் பகுதியில் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் நள்ளிரவில் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து ஆழ்ந்த கவலை கொண்டுள்ளதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

அதிகாரிகள் நிதானத்தை கடைபிடிக்கவேண்டும் என வலியுறுத்துகிறோம். காயமடைந்தவர்கள் மருத்துவ சிகிச்சைகளை பெறுவதற்கான உடனடி அனுமதியை வழங்க வேண்டும் எனவும் ஜூலி சங் கூறினார்.

காலி முகத்திடல் போராட்டக் களத்தில் ஏன் இப்படி நடக்கிறது என்று தெரியவில்லை. அதிகாரிகள் நிதானத்துடன் செயல்படவேண்டும். வன்முறையைத் தவிர்ப்பது முக்கியம் என இலங்கைக்கான கனேடிய தூதுவர் டேவிட் மெக்கின்னன் குறிப்பிட்டுள்ளார்.

காலி முகத்திடல் போராட்டக் களத்தில் இருந்து வரும் செய்திகள் குறித்து மிகவும் கவலை அடைகிறேன். அமைதியான முறையில் போராட்டம் நடத்துவதற்கான உரிமையின் முக்கியத்துவத்தை மீண்டும் வலியுறுத்துகிறோம் என இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் சாரா ஹூல்டன் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய மாற்றத்திற்கு கருத்துச் சுதந்திரம் அவசியமானது என ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதில் கருத்துச் சுதந்திரத்தைக் கடுமையாகக் கட்டுப்படுத்துவது எப்படி உதவும் என ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கை அலுவலகம் வெளியிட்டுள்ள ருவிட்டர் பதிவில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. (அ)

# முப்படையினருக்கு அதிகாரமளிக்கும் அதி விசேட வர்த்தமானி வெளிவந்தது

கொழும்பு, ஜூலை 23

நாடு முழுவதும் பொது ஒழுங்கைப் பேணுவதற்கு ஆயுதப் படைகளுக்கு அழைப்பு விடுக்கும் வர்த்தமானி வெளியிடப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாடு முழுவதும் பொது அமைதியை பேணுமாறு இராணுவத்தினருக்கு அழைப்பு விடுக்கும் அதிவிசேட வர்த்தமானியை வெளியிட்டுள்ளார்.

இதன் மூலம் இலங்கை இராணுவத்தினர், கடற்படையினர் மற்றும் விமானப்படையினருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை காலிமுகத்திடல் போராட்டக்களத்தை இராணுவத்தினர் கைப்பற்றி அங்கிருந்த போராட்டக்காரர்களை பலப்பிரயோகத்தின் மூலம் விரட்டியடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பாதுகாப்பு செயலாளராக மீண்டும் கமால் குணரத்ன

கொழும்பு, ஜூலை 23

பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக ஜெனரல் கமால் குணரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.ஜனாதிபதியால் இதற்கான நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னரும் அவரே பாதுகாப்புச் செயலாளராக கடமையாற்றினார். (அ)







# காலிமுகத்திடல் அரச வன்முறையை எதிர்த்து கோட்டை ரயில் நிலையம் முன் ஆர்ப்பாட்டம்!

கொழும்பு, ஜூலை 23

கொழும்பு - காலிமுகத்திடலில் அமைதி வழியில் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக அரசு வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டுள்ளதைக் கண்டித்து கொழும்பு - கோட்டை ரயில் நிலையம் முன்பாக நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

காலை 9 மணி முதல் இங்கு திரண்ட செயற்பாட்டாளர்கள், அரசின் வன்முறைகளை கண்டித்து கோஷம் எழுப்பினர்.

அமைதியான முறையில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து பெருமளவானவர்கள் அங்கு திரண்டனர். (அ)

# சஜித் அணி உறுப்பினர்கள் சிலர் அரசுடன் இணைவர்!

## ஹரின் பெர்னாண்டோ தகவல்



கொழும்பு, ஜூலை 23

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப் பினர் கள் சிலர், அரசுடன் இணை வார்கள் என அமைச்சர் ஹரின் பெர்ணான்டோ நேற்று தெரிவித்தார்.

“ஜனாதிபதி செயலக வளாகத்தில் இருந்துதான் போராட்டக்காரர்கள் நீக்கப்பட்டுள்ளனர். காலிமுகத்திடல் போராட்டக்களம் அகற்றப்படவில்லை. போராட்டக்காரர்களின் இலக்கு நிறைவேற்றப்பட்டுள்ளது என்றே நான் கருதுகின்றேன்.

இது தற்காலிக அமைச்சரவைதான். சர்வக்கட்சி அரசொன்றை அமைக்கவே ஜனாதிபதி முயற்சிக்கின்றார். ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் அதில் இணைவார்கள்.” - எனவும் ஹரின் பெர் ணான்டோ குறிப்பிட்டார். (அ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.07.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.